16 Dec 1922

©

JL
N15 A9
187443

ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(தொகுதி 8.)

துந்துபிஸ்ரீ ஆடிமீ முதல் ருத்ரோத்காரிஸ்ரீ
ஆனிமீ வரையில்

1922ஸ்ரீ ஜூலை முதல் 1923மீ ஜூன் வரையில்

நா. முனிசாமி முதலியார்,

" ஆனந்தபோதினி " ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

All Rights Reserved.

கலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0. } 1923 { தபால் கூலி வேறு.

ANANDA BODHINI

GOLDEN OPINIONS.

From Rao Saheb Late T. Ramakrishna Pillay Avl. B.A., F.M.U., F.R.H.S. Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Ananda Bodhini" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

Madras, 28th Nov. 1915,
THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKRISHNA PILLAY.

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A. I.S.O., Retired Inspector of Schools, *now* Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "**Ananda Bodhini**" It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
Madras, 5th Dec. 1915. } (Sd) A. C. PRANATARTIHARA IYER.

We have received the current number of the Tamil monthly "**Ananda Bodhini**," containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate sectTion is set apart for giving advice to women either in the form of abstract statements or small stories containing moral lessons.—*Hindu 22-9-15.*

Dear Sir,

Your Tamil monthly entitled "**ANANDA BODHINI**"..............is written in *easy, clear* and *readable* style, *well-suited, particularly,* to *ladies* who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their character. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt with in the short compass of the monthly are such that they deserve to be *read* and *re-read* from the view point to quality is contradistinction from style and rhetoric, which a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.* pages 288 and 289. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuance of the monthly, since it is being and has to be read by both sexes, ... It is very much to be envied that there should be over 10000 * subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception I wish the monthly all success.

Trivandrum } A V. SUBRAMANIA AIYAR,
...-17. } F.N. S.A. (Lon.) F.C.I. (Birm.)

* Now more than 19 Thousands.

1871×43

படித்த வித்வான்களுக்கும், படிப்பில்லா தவர்கட்கும் அடியார் சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் இது பெரிதும் பயன்படும். வசன நூலா யிருப்பதால் சகலரும் படித்து எளிதில் அடியார் சரித்திரங்களையும், மற்ற நீதிகளையும் அறியலாம். இது சுத்தமாக அச்சிடப்பட்டு அழகிய காலிகோ பைண்டும் செய்யப்பட் டிருக்கிறது. தமிழர் எல்லோரும் இதனை வரவழைத்து நற்பயனடைவார்களாக.

இதன் விலை ரூபா. 2—8—0.

ஆனந்தபோதினி சந்தாதரர்களுக்கு 31-1-23 வரையில் ரூ. 2-0-0

அருணாசலப் புராணம்

மூலமும் உரையும்.

17 - ஐதீகப் படங்களுடன்

இப் புராணமூலம், ம-ா-ா-ஸ்ரீ, எல்லப்ப நாவலர்களால் இயற்றப்பட்டது. இதன் உரை மழவை மகாலிங்கையவர்களால் செய்யப்பட்டது. இதிலுள்ள செய்யுட்கள் மிக்க பொருளமைதியுடனும், அழகுடனும், அமைந்தவை. அவற்றின் உரைகள் எவரும் செய்யுட்பொருளை யுணர்ந்து கொள்வதற் கேதுவாக மிகத் தெளிவுடனும், பொழிப்பாகவும் அமைந்தவை. ஆதலின், இந்நூலை எவரும் இனிதிற் படித்துணரலாம். இப்புத்தகத்தில்,

பாயிரம், திருநகரச் சிறப்பு, திருமலைச் சிறப்பு, பார்வதி திருவவதாரம், திருக்கண்புதைத்தல், பார்வதி இடப்பாகம் பெறல், வச்சிராங்கதபாண்டியன் கதை, வல்லாள மகாராஜன் கதை, தீர்த்தமகத்துவம், திருமலை வலம்புரிதல், ஆதித்தன் கதை, பிரதத்தராஜன் கதை, பாவந்தீர்த்த கதை, புளகாதிபன் கதை முதலியவைகளும், சருக்க அட்டவணையும், செய்யுளகராதியும், ஒவ்வொரு சருக்கத்தின் முதலிலும் சரித்திரசுருக்க வசனமும், ஐதீகப்படங்களும், ஈற்றில் திருவுருவப்படங்களின் அட்டவணையும்;

அருணாசல ஸ்தலத்தைச் சார்ந்தனவாகிய அருணாசல விசேடக் கொத்து, இருக்வேத சுலோகம், பாஸ்கர சங்கிதை சுலோகம், அதர்வண வேத சுலோகம், கிரிப்பிரதக்ஷண விதி, சைவசமயம், சைவசமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள், திருவண்ணாமலைத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், க்ஷேத்திரவெண்பா, குருநமச்சிவாயர் சரித்திரம், அண்ணாமலை வெண்பா, அண்ணாமலையார் வண்ணம், அருணகிரி அந்தாதி, திருவருணைத் தனி வெண்பா, தீபதரிசனச் சரித்திரச் சருக்கம், தீபவிதி, தீபதத்துவம், கார்த்திகை தீபச் சிறப்பு, திருவருணை யந்தாதி, திருவருணைக்கலம்பகம், சோணசைலமாலை, சாரப்பிரபந்தம், அண்ணாமலைச் சதகம், கார்த்திகைதீப வெண்பா, சோணாசல வெண்பா, சோணாசல சதகம், திருவருணைக் கலிவெண்பா, திருவண்ணாமலைத் திருவருட்பதிகம், அருணாசலேசர் பதிகம், உண்ணாமுலையம்மை பதிகம், ருத்திர சங்கிதைத் தோத்திரம், உண்ணாமுலையம்மன் சதகம், அருணாசல சதகம், அருணாசல அக்ஷரமாலை, சீர்பாத வகுப்பு, வேடிச்சிகாவலன் வகுப்பு, வேல் வகுப்பு, மயில் வகுப்பு, சேவகன் வகுப்பு, வேல் வாங்கு வகுப்பு, பஞ்சரத்தினத் திருப்புகழ், கந்தரனுபூதி முதலியவைகளும் அடங்கி யிருக்கின்றன.

திருவண்ணாமலை ஸ்தலமானது, சைவ சமயத்தாரே யன்றி மற்ற மதஸ்தர்களெல்லோராலுமே விசேஷமாகப் பாராட்டிக் கொண்டாடத் தக்கது. [illegible] ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகைமாதத்தில் வரும் திருக்

கார்த்திகை தோறும், மற்றைய உத்சவகாலங்களிலும் பற்பல தேசங்களிலிருந்தும் எண்ணத் தொலையாத ஜனங்கள் திரள் திரளாகவந்து கடவுளைச் சேவித்து வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு போகின்றார்கள். ஆதலின், அவர்கட்கு இத்தலத்தின் மகிமையும், பிரபந்தத்துதிகளும், மற்றய விசேஷங்களும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாம். ஆதலின், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டால் இப்புனிதமாய தலத்தின் மகிமைகளை யுணர்ந்து அருணசலேசுரரை வழிபட்டுத் தமக்கு வரப்பிரசாதங்களைப் பெற்று நற்கதியடைதற் கேதுவுண்டாகும். இது நலவிதத்தில் அச்சிட்டு அழகிய பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் எழுதி இதனை வரவழைத்துக்கொள்க.

இதன் விலை ரூபா. 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்க்கு 31-1-23 வரையில் ரூபா. 1-4-0

நாலடியார் மூலமும் உரையும்

நாலடியார் என்பது, நம்தமிழ் நாட்டார்க்கே உரியனவாய், வெகுகாலமாக நிலைபெற்று, பாரபக்ஷமின்றி நடு நிலைமையுடன் எல்லோர்க்கும் ஒரேவிதமான நீதிகளையே கூறிவரும் சிறந்த நீதிநூல்களுள் ஒன்று. இதற்கு "நாலடி நானூறு" என மற்றொரு பெயருமுண்டு. இது, நான்கடிகளாலாகிய சுமார் நானூறு வெண்பாக்களை யுடையதாதலின், இப்பெயர் பெற்றது.

முன்னொரு காலத்தில் ஜைன முனிவர்கள் எண்ணாயிரவர்கள், பஞ்சத்தால் வருந்தித் தங்கள் நாட்டைவிட்டுப் பாண்டிய நாடடைந்து அந்நாட்டரசனால் ஆதரிக்கப்பட்டு வந்தனர். அப்பஞ்சம் நீங்கியபின் அவர்கள் பாண்டியனிடத்தில், தங்கள் சொந்த நாட்டிற்கே அநுமதி கேட்டனர். பாண்டியன், கல்வியிற் சிறந்த அம்முனிவர்களைப் பிரிய இஷ்டமில்லாதவனாய் அங்கேயே இருக்கும்படி வேண்டினன். முனிவர்களுக்கு அது சம்மதியில்லையாதலின், அரசன் தாக்ஷிண்யத்திற் கட்டுப்பட்டுச் சில தினங்களிருந்து ஒருநாளிரவில் ஒவ்வொரு முனிவரும் ஒவ்வொரு வெண்பாவெழுதித் தங்கள் தங்கள் ஆசனத்தின்கீழ் வைத்துவிட்டுப் பாண்டியனிடம் சொல்லாமலே போய்விட்டார்கள். விடிந்தபின் பாண்டியன், அவர்கள் போய்விட்டதற்கு வருந்தி அவர்கள் இருப்பிடங்களைச் சோதித்தான். அப்போது அவர்களால் எழுதிவைக்கப்பட்ட பாடல்கள் அகப்பட்டன. அவைகள் மிக்க நீதி பொருந்தியவைகளாயிருந்தன ஆனால், அவைகளெல்லாம் வரிசைக்கிரமமில்லாமலும், ஒரு நூலாக்குவதற்குத் தகுதியில்லாமலும் முரண்பட்டிருந்தபடியால் அவற்றை வைகையிலெறிந்தான். அவற்றுள் நானூறு செய்யுட்கள் எதிரேறிக் கரைசேர்ந்தன. பாண்டியன் அவற்றை யெடுத்துப் பார்க்கையில் ஒருநூலாக வகுப்பதற்குத் தகுதியுடையனவாயிருந்தன. ஆதலின், அவன், அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி "நாலடியார்" எனப் பெயரிட்டு ஒரு நூலாக்கினன். அதுவே இந்நூலாகும்.

இதில், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களும்;

செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, அறன் வலியுறுத்தல், தூய்தன்மை, துறவு, சினமின்மை, பொறையுடைமை, பிறர்மனை நயவாமை, ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம், கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெரியாரைப் பிழையாமை, நல்லினஞ் சேர்தல், பெருமை, தாளாண்மை, சுற்றந்தழால், நட்பாராய்தல், நட்பிற் பிழைபொறுத்தல், கூடாநட்பு, அறிவுடைமை, அறிவின்மை, நன்றியில்செல்வம், ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம், அவையறிதல், புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை, பன்னெறி, பொதுமகளிர், கற்புடைமகளிர் காமநுதலியல் என்னும் நாற்பது அதிகாரங்களும் உள்ளன.

இதற்கு விளக்கான உரையும் எழுதப்பட்டுள்ளது. ஆதலின், இதிலுள்ள நீதிகளை எல்லோரும் படித்து நன்குணரலாம். பிறசில நூல்களில் ஒருஜாதிக்கொரு நீதியும், மற்றொருஜாதிக்கு வேறொரு நீதியும் கூறப்பட்டிருக்கும் பாரபக்ஷம் இந்நூலில் அணுவளவேனும் இராது. எல்லா வகுப்பினருக்கும் ஒரேவிதமான நீதியே இதில் கூறப்பட்டிருக்கிறது. எத்தேசத்தார்க்கும, எக்குலத்தார்க்கும், எம்மதத்தினர்க்கும் இதிற் கூறப்படும் நீதிகளெல்லாம் பொதுவானவையே. நம் தேசநீதிகள் தெரியாமல் சிலர் அன்னியபாஷை அரைகுறைப் படிப்பால் பிறதேச ஆசாரங்களை நாகரீகமெனக் கொண்டு நம் நாட்டைக் கெடுத்துவரும் இக்காலத்தில் இந்நூல் எல்லோர்க்குமே நல்லறிவு புகட்டக்கூடியது. இதனைப்படித்து இதன் நீதிகளின்படி நடப்பதால் இம்மை மறுமைப் பயன்களை எளிதில் அடையலாம், ஆதலின், இந்த அரியநூலை வாங்கி வாசிப்பீர்களாக. சுத்தமாய் அச்சிட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்க்கு 31-1-23 வரையில் ரூபா 1-0-0

நளவீம பாக சாஸ்திரம்.

நளனுடைய சமையல் பாகங்களெல்லாம் அடுப்பேற்றாமல் செய்யக் கூடியவை; வீமனுடைய பாகங்களெல்லாம் அடுப்பேற்றிச் செய்யக் கூடியவை. இவ்விருவராலும் செய்யப்பட்ட சமையல் முறைகளே சிறந்தவை யென்பது உலகறிந்த விஷயம். எங்கேனுமோரிடத்தில் சமையல் நன்றாயிருக்கும் போது ஜனங்கள், "அப்பா! இது நளபாகந்தான்; வீமபாகந்தான" என்று சொல்லிக் கொள்வதாலும் இதனை நன்குணரலாம். இதனால் நளபாகப்படியும், வீமபாகப் படியும் செய்யப்பட்ட சமையல் உணவுகள் மிக ருசிகரமாயும், தேகத்தில் வியாதிகளை நீக்கி, பலத்தை உண்டாக்கக் கூடியவைகளாயுமிருக்கு மென்பது நிச்சயமாகத் தீர்மானிக்கப்படுகிறது. இன்னும் நளபாகங்களெல்லாம், மனிதர் யாத்திரையான காலத்தில், தங்குமிடங்களிலெல்லாம் சுலபமாகச் செய்துகொள்ளக்கூடியவை. வீமபாகமெல்லாம் பெரும்பான்மையும் வீட்டிலிருக்கும்போது பல சாதனங்களுடன் செய்துகொள்ளக் கூடியவை. இவ்விரண்டு பாகங்களுமே இந்நூலில் அடங்கியிருப்பதால் மனிதர்க்கு இது, எந்த சமயத்திலும் உதவி செய்யும். அன்றியும் இதில் சொல்லப்பட்டிருக்கும் பாகங்களெல்லாம் தனவந்தர் முதல் ஏழைகள் வரையில் சென்று உபயோகிக்கக் கூடியவைகள். இதிற் சொல்லுகிறபடி பாகங்களை அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி அதிகச்செலவிலும், சொற்பச் செலவிலும் செய்து முடித்துக்கொள்ளலாம். [illegible] செலவில் செய்யத்தக்க பாகங்களும் இதில் உண்டு; சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், [illegible], ததியன்னம், புளியோதனம், எலுமிச்சம்பழ சாதம், கிச்சடி முதலிய அநேகம் சாதவகைகளும், பொரி

யல், வறுவல், கூட்டுக்கறி, உப்பேறி, பச்சடி, முதலிய அநேகம் பதார்த்த வகைகளும், பல குழம்பு வகைகளும், சாம்பார் வகைகளும், இரச வகைகளும் எண்ணிறந்தபலகாரவர்க்கங்களும், ஊறுகாய் வகைகளும், சட்னி தினிசுகளும், இன்னும் பற்பல அற்புத முறைகளும் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. தேகத்திற்குக் குணஞ்செய்யும் உணவுப் பொருள்களின் வகைகள், சமையற் பாத்திரம் முதலிய கருவிகளின் விதங்கள், சமையற்காரரின் இலக்ஷணங்கள், மடைப்பள்ளி யிலக்கணம், சமையலின் சட்டதிட்டங்கள் முதலியவைகளெல்லாம் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. தேகத்திற்கு ஆதாரம் உணவே. அதை நல்ல விதத்தில் பாகஞ்செய்து சாப்பிடாவிட்டால் மனித வாழ்க்கையானது பலவித நோய்களுக்குட்பட்டுப் பயனற்றுப் போகும். இதை யுணராத அநேக ஜனங்கள் அகப்பட்டதைச் சட்டியில்போட்டு இரண்டு உப்பையும் புளியையும் மிளகாயையும் அதன் தலையில் அக்ஷதை யிடுவதுபோல் இட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து வயிற்றிற்போட்டு அடைத்துப் பலவித நோய்க்குள்ளாகின்றார்கள். நாகரீகமான சமையல் பாகந் தெரிந்தவர்களுங்கூட மேன்மேலும் பற்பல பாகங்களைச் செய்யத் தெரியாமல் விருந்து வந்தபோது விழிக்கிறார்கள். கலியாணம் முதலிய விசேஷ காலங்களில் விநோத சமையல்களைச் செய்வதற்குச் சுயம்பாகிகளைத் தேடி அலைகின்றார்கள். இப்புத்தகமொன்று கையிலிருக்குமானால் இவ்வகை அலைச்சலெல்லாம் எவர்க்கும் ஏற்படாது. ஆதலின், நம் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் இந்த அரிய பாக சாஸ்திரத்தை வாங்கி வீட்டில் வைத்துச் சுகவாழ்வை யடையும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்க்கு 31-1-23 வரையில் 0-12-0.

மலையாள பகவதி.

(கும்பிட்டு விழுந்து குடுமி பிடிகொடுத்தவன் கதை.)

இது, படிப்போர்க்கு நகைப்பையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கி அறிவு புகட்டத்தக்க அரிய தமிழ்க் கதை.

இதில் ஓர் அரண்மனைச் சேவகனாகிய சுப்பையன் என்பவன், கோட்டைவாயிற் குரங்காய் அமைந்து ஜனங்களுக்கு துன்பஞ் செய்வதும், அவனோடு விகடக் குருசாமி வாக்குவாதஞ் செய்தலும்; சுப்பையன்மேல் ஒரு புலவர் வசைபாடிவிட்டு ஓடுதலும், விகடக்குருசாமி, சுப்பையன் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள மலையாள பகவதியென்னும் பூசாரிவேடம் பூண்டு வந்து அவனோடு சிநேகஞ்செய்து அவன் குடியைக்கெடுக்கத் தொடருவதும் சுப்பையனுக்கு ஜென்மச்சனி தொடர்வதும், தேளினால் சுப்பையன்வீட்டில் பெருங் கூக்குரல் கிளம்புவதும், சுப்பையன் அனுவசியமாய் மீசை பறிகொடுத்தலும், பாக்கைக் கடித்துப் பல்லுடை படுதலும், அவன் தலையில் கட்டிடம் இடிந்து விழுதலும், கடன்காரச் சப்பிகலகமும், அவனுடைய உத்தியோகத்தில் இடிவிழுதலும், அவன் வீட்டு வைத்தியர் வாந்திபேதியால் மடிதலும், அவன் ஆபத்தில் அம்பட்டனோடு சண்டையிட்டுத் தண்டம் கொடுத்தலும், அவனை ஊரார் பரிகசித்தலும், கடன்காரர் அவனை ஹிம்சிப்பதும், அவன்வீடு இடிந்து விழுதலும், திருடர் அவன்வீட்டில் கொள்ளையடித்தலும், அவன் பசுவும் வேலைக்காரியும் சாவதும், அவன் விளைவிதைக்கப் போகும்போது கடன்காரர் வழிமறிப்பதும், அவனுக்குத் தள்ளாத விருந்து வருவதும், சாவோலைவருவதும், வரிக்காரர் அவனை ஹிம்சிப்பதும், குருக்கள் தக்ஷிணைக்குக் குறுக்கிடுவதும், விதைப்பொட்டி நழுவி விழுதலும், உழவுமாடு இடிசென்று சாவதும், பசுமாடு மடிதலும், வேலைக்காரிமடிவதும், அவன் பிணமெடுக்கும் செலவிற்கு வந்த விருந்தாளியின் கடுக்கனைக்கழற்றி விற்றலும், விருந்தாளி சொல்லாமல் ஓட்டம்பிடிப்பதும், சுப்பையன் தமக்கை சாவதும், அந்த இழவிற்குப் போகும்போது அவன் திருடரால் உதைவாங்குவதும், அவனைச் சர்ப்பந்தீண்டுதலும், அவனுடைய பிள்ளையும் இறந்துபோவதும், மிஞ்சி நின்ற மாடு களவுபோவதும், இறந்த பிள்ளையை அடக்கம்செய்ய அவன் தன்மனைவியாகிய முத்துக்கருப்பாயின் காப்பைக்கழற்றி விற்பதும், அவனுடைய மைத்துனன் கோபித்துக்கொள்வதும், இத்தனை துன்பங்களும் தெய்வகுறையால் வந்ததென்று அவன் தன் பழைய பகையாளியாகிய மலையாள பகவதியிடம் கோடங்கி பார்க்கத் தொடங்குதலும், பூசாரிசெய்யும் கோடங்கிக் கூத்துக்களும், மலையாள பகவதி பழையவிரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு தனமேல் சுவாமி வந்துவிட்டதுபோல் நடித்துச் சுப்பையனை இழுத்துப் போட்டுச் சினந்து உதைப்பதும், சுப்பையனுக்குக் கழிப்புச் சுற்றுதலும், சுப்பையன் குலசாமிக்குப் பூஜைபோடுதலும், முத்துக்கருப்பி மாலையாள பகவதிக்கு வசப்பட்டு அவனுடைய போதனையால் தன்மேல், குலசாமி வந்துவிட்டதாக நடித்துச் சுப்பையனைத் துடைப்பக்கட்டையால் விளாசுவதும், பூசாரிபோதனைப்படி சுப்பையன் தன் பிராணத்தை நீக்கிக்கொள்ள எமனுக்கும் சனிக்கும் பூஜைபோடுவதும், எமன் ஆவேசம் தன்மேல் வந்துவிட்டதாக நடித்தும் பூசாரி சுப்பையன் வீட்டுச்சாமான்களை யெல்லாம் உடைத்து நாசமாக்குவதும், அப்போது சுப்பையன் கும்பிட்டு விழல் பூசாரி அவன் குடுமியைப்பிடித் திழுத்துச் சுழற்றி அடியோடு மூளைப்பிடுங்காகப் பிடுங்கிவிடுதலும், கோடாங்கியின் சூதான வார்த்தைப்படி சுப்பையன் எமனுக்குத் தக்ஷிணையாக அதிகப்பணத்தைக் கொண்டுபோய்ச் சுடுகாட்டில் புதைத்து விட்டுத் திரும்பிப்பாராமல் வந்துவிடுவதும், பூசாரி இரகசியமாகப்போய் அதனை யெடுத்துக் கொள்வதும், இப்படிப் பலவகையிலும் மலையாளபகவதி சுப்பையன் குடியை அடியோடு கெடுத்து அவனைச் சோற்றுக்கலையவிட்டு அவன்மனைவியாக முத்துக் கருப்பியைப் பேயாடச்செய்து அப்பேயை ஓட்டுவதுபோல் நடுராத்திரியில் அவளைக் கூட்டிக்கொண்டு ஓடிவிடுவதும், பின் சுப்பையன் உண்மைதெரிந்து அவர்களைத் தேடிப்போய் அனுதைப் பிணமாய் மடிதலும், இன்னும் பற்பல விஷயங்களும் எத்தனைபேர் அடக்கினாலும் அடக்கமுடியாத சிரிப்பை உண்டாக்கி விடும்.

மேலும் இப்புத்தகம் எப்பேர்ப்பட்ட விசனத்தையும் போக்கிவிடும். பலஜனங்களுக்குத் தீங்குசெய்வோர் அடியோடு அழிவார்களென்பதையும், படித்த வித்வான்களாகிய பெரியோர் வாக்குப் பலிக்குமென்பதையும், இன்னும் பற்பல ஜனங்களின் இயற்கைகளையும் நீதிகளையும் இக்கதையால் நன்குணரலாம். படிப்பதற்கு வேடிக்கையாய் அறிவைப் புகட்டுவதில் இக்கதை சிறந்ததாகும்.

இதன் விலை ரூ. 1—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

இந்திராபாய்

அல்லது இந்திரஜாலக் கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இதுமிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமானவைக ளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துகளி லிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையையுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காது விட்டால் பின்னால் அதற்காக உண்மையில் வருத்தப்படுவார்கள். உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா **2—8—0**.

ஓர் புதிய] **[நாவல்**

அமராவதி

அல்லது அதிசய மர்மங்கள்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமிமுதலியா ரவர்களால் எழுதப்பட்டது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனா யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்றாய் நிரூபிககப்பட் டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ் வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

நாவலை வாசிப்பதால் பயனடைய விரும்புவோர் இதிலிருந்து பல அரிய நீதிகளையும் புத்திமதிகளையும் நல்ல உலக அனுபவத்தையும் கிரகித்துக் கொள்ளலாகும். நாணயமான கடிதத்தில் அச்சியற்றப் பட்டது.

இதன் விலை ரூபா. 2. தபால் கூலி பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, போஸ்டு, மதராஸ்.

அரங்கமேடைகளும் முக்கிய சீர்

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8 } துந்துபி௵ மார்கழி௴ கஉ
1922௵ டிசம்பர்௴ 16உ { பகுதி 6

கடவுள் வணக்கம்.

ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநா
　　னத்துவித வாஞ்சை யாத
லரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
　　யாகுமறி வவிழ வின்பம்
தாக்கும்வகை யேதிராட் சரியைகிரி யாயோக
　　சாதனம் விடுத்த தெல்லாம்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கமின்
　　சாராத பேறி வதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்து
　　வாய்க்கும் படிக்கு பாயம்
வருவித்து வட்டாத பேரின்ப மானசுக
　　வாரியினை வாய்ம டுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
　　சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
　　சின்மயா னந்த குருவே.

உடல்பொய் யுறவாயி னுண்மையுற வாகக்
கடவாரார் தன்னருளே கண்டாய்—திடமுடனே
யுற்றுப்பார் மோன னொருசொல்லே யுண்மைநன்றுப்
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ்.

பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கா லப்பாத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்—நேராக
நிற்குந் திருவருளி னெஞ்சேயா நிற்பதல்லால்
கற்குநெறி யாதினிமேற் காண்.

அரும்பொருள்

1. இடிகரை=வெள்ளத்தாலடி யற்று
கரை—தேகம் எந்த சமயத்திலோ
அம் மண்கரைக்கு ஒப்பிடப்பட்டது.

"பொத்தை யூன் சுவர் புழுப்பொதிந்துழுத் தசும்
பொய்க்கூரை * *" என்றார் மணிவாசகப் பெருமான்.

ஆக்கையெனு........முடவனிச் சித்தப்படியாகும்=அழியும் தேகமே மெய்யென்று நம்பிய பாவியாகிய நான் அத்துவித ஞானம்பெற அவாக்கொள்ளுதல், முடவன் உயரமான மரத்தின் கிளையிலுள்ள தேனை யிச்சிப்பதை யொக்கும்.

தேகம் முதல் நாதம் ஈறாகவுள்ள தத்துவங்கள் அனைத்தும் அநித்தியம் துக்கம் சடம் என்றுணர்ந்து அவற்றிற்கு மேனின்ற ஆன்மசொரூபமே தானென்றறிவதே ஞானம். தேகம் தான் என்றும் நித்தியம் என்றும் நம்புவது சுத்த அஞ்ஞானம். இத்தகைய அஞ்ஞானம் என்னிடமிருக்க நான் ஞானமடைய விரும்புவது தகுதியோ என்றார்.

அறிவவிழ=அறிவு விகசிக்கும்படி

இன்பம் தாக்கும் வகையேது=பேரின்பம் உண்டாகும் வழி யேது (உண்டாகாது என்றபடி).

என் மார்க்கங்கள் சாராத=எந்த மார்க்கங்களும் அணுகாத.

போறிவதாய்=அகண்டாகார ஞானமாய்.

வாக்கு மனமணுகாத=மனோ வாக்குக் கதீதமான.

ஒருவன் ஞானமடைய விரும்பின் நித்தியா நித்திய வஸ்து விவேகம் முதலிய சாதனங்களை யடைந்து சரியை கிரியை யோகம் என்னும் சோபானங்களை யனுசரித்து ஞானமடைய வேண்டுமே யன்றி யவற்றை யலட்சியம் செய்துவிட்டால் ஞானம் கிட்டாது என்று அறிவுறுத்துகிறார்.

2. உடல் பொய் உறவு=தேகத்தின் உறவு பொய்; அதாவது அநித்தியம்.

(தேகம் சதா நம்மோடு கூடவே யிருக்கிறது. நம் தேகம் என்று எவ்வளவோ சொந்தம் பாராட்டி அதைப்போற்றிப் போஷித்துப் பாதுகாக்கிறோம். ஆனால் எந்த விநாடியிலோ அது சவமாகக் கீழே விழ நாம் அதை விட்டுப்பிரிந்து விட நேர்கிறது. இவ்வாற்றால் இத்தகைய தேகத்தின் உறவே பொய்யாயிருப்பதாயின், வேறு எந்தச் சுற்றத்தைத் தான் உண்மையென எண்ணுவது!)

மோனன் ஒரு சொல்லே=மௌனதேசிகர் அருளிய ஒரு மொழியே.

(மௌன தேசிகர் தாயுமான சுவாமிகளின் ஞான குரு). குரு உபதேசிக்கும் ஒரு மொழியே நமக்கு உண்மையான சுற்றமன்றி மற்றையாவும் அநித்தியம் என்றார்.

...ந்தற்கு மிடங்கொடுக்கு மந்த
...மொழிக்கு மொழிக்குமென மொழிந்த
...லையிலக்கு மற்றமொழி யெல்லாம்
...வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
* * * * *"

இந்தச் சுவாமிகளே அருளியுள்ளது காண்க.

3. பாராதி பூதம்=பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்கள்.

பார்க்குங்கால்=(தத்துவ ஆராய்ச்சிசெய்து தன்னால் காணப்பட்ட வனைத்தும் தானல்ல வென்று நியதிசெய்து முடிவிலுள்ள உண்மைப்பொருளை) உணருமிடத்து.

அப்பரத்தின் சீராக நிற்கும்=யாவும் அப்பரம் பொருளின் வடிவமாகவே காணப்படும்.

"எல்லாம் தானாகவே இரண்டற்று நிற்கும் அகண்டாகார சொரூபமாகிய அந்தத் திருவருளில் நானென்பதற்று நாம் கிலத்து நின்றுவிட வேண்டியதே நாம் செய்யவேண்டிய காரியமன்றி, அதாவது அருட்கடலில் நம்மை யிழந்துவிட வேண்டியதன்றி, இனிக்கற்க வேண்டிய தொன்றுமில்லை" என்றார்.

ஆனந்தபோதினி

துந்துபி௵ மார்கழி௴ கஉ

ஹிந்து மதம்.

நேயர்களே! இப்போது நாம் நமது மதத்தைப்பற்றிப்பிரத்தியேகமாக வரைய வேண்டுவது ஏனோ வென்று சிலர் ஐயுறலாகும். ஆகையால் அதற்குக் காரணம் கூறுதும்.

இக்காலத்தில் பிறமதஸ்தர், தந்திரமாக நம்மவரிற் பாமரரை மயக்கித் தங்கள் மதத்திற்கு இழுத்துக்கொள்ள அதிகமாக முயல்கிறார்கள். நமது மதத்தைப் பாதுகாக்கும் வேந்தனில்லை. அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட மடங்களோ அந்த விஷயத்தில் கண்ணும் தெரியவில்லை காதும் கேட்கவில்லை யென்று இருக்கின்றன,

இது யாரிட்ட சாபமோ தெரிலக் கள்ளன்.
தொழில் செய்வோர்தான் மதத்திற்களால் எழுதப்பட்டது.
மென்ற விதியில்லை. மதம் ஒவ்வொருவருக்கு அனேகம் துப்பறி
ல் சம்பந்தப்
ஒவ்வொருவனும் தன் மதத்தைப் பாதுகாக்க வேண்வி, சாத்
யுடையவனே. தேச பக்தியும் இத்தகையதே. நேராக மதத்தை

பற்றி வாதித்து நமது மதத்தில் சரியான மோக்ஷ மார்க்கமில்லை யென்றும் தங்கள் மதத்தில் இருக்கிறதென்றும் நிரூபித்துத் தம் மதத்தில் சேர்த்துக் கொள்வதாயின் அத்தகைய எதிரியை நம்பலாகும். அது நீதியுமாகும். அப்படிக்கின்றி சுயமத ஆராய்ச்சியில்லாத பாமரருக்கு, நியாயமில்லாத வெளித்தோற்றமான சில குற்றங்களைக் கூறி, நயப்பான வார்த்தைகளால் உலக சம்பந்தமான பலவித ஆசைகளைக் காட்டி மயக்கித் தம் மதத்தில் சேர்த்துக்கொள்ள முயல்வோர் விஷயத்தில் நாம் சாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

நமது மதத்தவர் அத்தகைய புறச் சமயபோதகர்களால் மயக்கப்படா வண்ணம் தடுக்க வேண்டியது நமது கடமை.

நமது மதம் அநாதியா யுள்ளதும் அழிவற்றதுமான சத்தியத்தை யஸ்திவாரமாக வுடையது. அந்நிய நாட்டார் சிலர் சரித்திரங்களில் நமது வேதம் ரிஷிகளால் எழுதப்பட்டதென்று வரைந்திருக்கிறார்கள். வேதம் 'எழுதாக்கிளவி'. ரிஷிகள் அவற்றைப் பிரித்தெழுதினார்களே யன்றி அவர்களே உண்டாக்கியதல்ல. அவர்களுக்கு முன்பே அது உண்டு. நமது வேதத்தில் கூறியுள்ள முடிவான முத்தி நிலை கடவுளோடு ஆன்மா கலந்துவிடுதலேயாகும். இதினும் மேலான நிலையில்லை. இருக்கவும் முடியாது.

நாமரூபமாகத் தோற்றும் யாவும் அழியுந் தன்மையன; அவையாவும் அநித்தியம்; கடவுள் ஒருவரே நித்தியம் என்பதைப் பற்றியும், கடவுள் இலக்ஷணம் ஆன்மலக்ஷணம், மோக்ஷலக்ஷணம், கடவுள் செய்யும் பஞ்ச கிருத்தியங்களின் இரகசியங்கள் முதலிய யாவும் நமது மதத்தில் தெளிவாகவும் பூரணமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. எல்லா மதக் கோட்பாடுகளும் இதில் அடங்கியிருக்கின்றன. கடவுள் எங்குமாய்ப் பலவுமாய் நிறைந்து நிற்கின்றார் என்ற உண்மையை அனுபவமாக இத்தேகத்திலிருக்கும் போதே காணக்கூடிய மார்க்கத்தைப் போதிப்பது நமது மதம்.

அவ்வாறு அனுபவித்தே அதை
. இதுவே ஞானம் என்பது. இதை
ப்படியான மார்க்கத்திற்கு யோகம் என்று
லை எல்லா மனிதர்களும் இம்மார்க்கங்களைக் கிரகித்
ளத் தக்க அறிவு வல்லமையுடையவர்களல்ல. கடவுளை
அருவமாக உபாசிக்கத் தக்கவர்களே இம்மார்க்கத்தை யனுஷ்டிக்கத் தகுந்தவர்கள். இவர்கள் இதற்கு முன் செய்த முயற்சிகளால் கடவுளிடம் பக்தி முதிர்ந்து சுத்தமடைந்த மனமுடையவர்கள். மனதை யொருவழி நிற்கச் செய்வோர், அதாவது மனதைத் தம் வயப்படுத்தச் சக்தி வாய்ந்தோரே இந்த யோக ஞானங்கட்கு அதிகாரிகள்.

அத்தகையோர் மிகச் சிலரே. அப்படியாயின் கீழ்த்தர அறிவுடையோர் கதியென்ன ? அவர்களும் அந்த அதிகாரத்தைப் பெறவே சரியை கிரியை என்ற மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் புராணங்களும் மந்த அதிகாரிகள் பக்தியடைந்து சித்த சுத்தி பெற்று மேல்நிலைக்கு வருவதற்கே ஏற்படுத்தப்பட்டன. ஜனங்களில் அனேகர்க்கு ஆன்மார்த்த விஷயத்தில் மனம் செல்வதேயில்லை. அவர்களுக்கு இலௌகிக விஷயங்களிலேயே வாஞ்சை. குழந்தைகளுக்குத் தின்பண்டங்களில் ஔஷதம் மறைத்துவைத்துக் கொடுப்பதுபோல், அத்தகையோர்க்கு இலௌகிக சரித்திரங்கள் போலுள்ள புராணங்களில் ஆங்காங்கு ஞானமார்க்கங்கள் யோகமார்க்கங்கள் குறிப்பாய்க் கூறப்பட்டுள்ளன.

மனம் ஒருவழியில் நிலைக்கச் செய்யவும் பக்தி யுண்டாகவும் சகுண உபாசனை—கடவுளை உருவமாகப் பாவிப்பது—அவசியம் வேண்டியதாக விருக்கிறது. மேல்நிலையில் இது தள்ளப்படுகிறது. ஆரம்பத்தில் ஒருவர்க்கும் மனம் அருவத்தில் நிலைக்காது, பக்தி யுண்டாகாது. கிருஸ்தவர்களும் மகம்மதியரும் விக்கிரகாராதனையை யங்கீகரிக்கவில்லை. அதற்குத் தக்க காரணமிருக்கிறது. அக்காரணம் பதுமையாராதனை மலிந்திருந்த அத்தேசங்களில் அம்மதங்கள் தாபிக்கப்பட்ட காலங்களுக்குத் தக்கவைகளாக விருந்தன. நமது நாட்டில் பதுமை யாராதனை யிருந்ததுமில்லை. அக்காரணங்கள் நமக்குப் பொருந்தியவையுமல்ல—பதுமை யாராதனைக்கும் விக்கிரகாராதனைக்கும் மிக்க பேதம் உண்டு. கடையில் விற்கும் பதுமையைக் கொணர்ந்து பூசிப்பது பதுமை யாராதனை,

சாத்திரப்படி செய்யப்பட்ட விக்கிர...
ளின் அருள் விலாசம் தோன்றச்செய்து ...
கடவுளாகப் பாவித்துப் பூஜிப்பது விக்கிரகார...
டார் சொல்பகாலத்திற்கு முன்பே சத்தத்திற்கு (ஒலி...
யுண்டென் றறிந்தார்கள். மந்திரம் பலவிதமான ஒலியே. ஒ...
யறிவிப்பது வரி வடிவம். அதாவது எழுத்து. நம்மவர் ஆதி காலத்திலேயே அந்த உண்மையை யறிந்து மந்திர சக்தியால் விக்கிரகத்தில் ஈசுவரன் அருள் பிரகாசிக்கும்படி செய்தார்கள். இதை விரிக்கிற் பெருகும். இதைப்பற்றி விரிவாக நமது சஞ்சிகைகளில் பிரம்ம ஸ்ரீ சிவானந்த சாகர யோகீஸ்வரரவர்கள் கூறியுள்ளதைக் கண்டு கொள்க.

கிருஸ்துவர்களும் மகம்மதியரும் கடவுளை உருவமாகப் பாவிக்கா விட்டாலும்; அவர்கள் சிந்தனையில் உருவ பாவனையில்லாமல் பக்தி ஜனிக்காது. அவர்கள் முறையே கிருஸ்துவையும், மகம்மத் ரசூலையும் கடவுளுக்கு இரண்டாவதாகவும் பரமாசாரியர்களாகவும் தியானித்தே பக்தியைப் பெருக்க வேண்டும். நமது விக்கிரகாராதனை பாபமானதுமல்ல, கடவுளுக்கு விரோதமானது மல்ல என்பதற்கு அனேக நியாயங்களுள. விரிக்கிற் பெருகும்.

புராணங்களில் மேல் போக்காய்ப் பார்ப்பவர்களுக்குக் கேவலம் இலௌகீகத்தன்மையாகத் தோன்றத் தக்கவை பலவுள. சில தகாதவைகளாகவும் வெளிக்குத் தோற்றும். ஆனால் அதன் உட்கருத்து மிக்க பரிசுத்தமான ஞானார்த்தத்தை விளக்குவதாகவிருக்கும். ஊன்றி யாராய்வார்க்கே யது விளங்கும். திருட்டாந்தமாக கிருஷ்ணர் அனேகம் கோபிகா ஸ்திரீகளோடு விளையாடினார், பரமசிவன் தாருகாவன ரிஷி பத்தினிகளின் கற்பை யழித்தார் முதலியவை. பாமரராயுள்ளோர் இவற்றைக் கடவுளர் திருவிளையாட்டாகவே நம்பி பக்தி செலுத்துகிறார்கள். எல்லாம் அவரவர் மனோபாவப்படி பலன் அளிக்கின்றன. எங்கோ சிலர் வெளித் தோற்றத்தால் தவறாகக் கருதிக் கொள்ளலா மாயினும் பெரும் பாலார் நன்மையே யடைகிறார்கள்.

முற்காலத்தவர் பெரியோர் வாக்கென்று எதையும் நம்பி நற்பயனையே யடைந்தார்கள். இக்காலத்தில் குயுக்தியும் குதர்க்கமும் மலிந்து விட்டன. இது கலியின் வன்மை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் தெய்விகம் பொருந்திய கவிவாணரால்

...ப பரிமேலழகர், இளம்பூரணர்,
...கைய தெய்வப் புலமை வாய்ந்தோர்
... இக்காலத்தில் அத்தகைய உரைகளை மறுத்துக்
...வான்களும் தோன்றி யிருக்கிறார்கள்.

அன்னிய மதத்தவர்கள் நம்மதத்திலுள்ள பாமரர்களிடம் இப்புராணக் கதைகளையும் சரியை கிரியைகளையும் பற்றியே குற்றங்கூறி நம்மவர்க்கு வெறுப்புண்டாகும் வண்ணம் செய்கிறார்கள். மத ஆராய்ச்சியில்லாத பாமரரிடம் நயமான வார்த்தைகளால் "இப்படி மனைவியை வைத்துக்கொண்டு அன்னிய மனைவியரோடு சோரம் செய்வதும், பல பெண்களை வைத்துக்கொண்டிருப்பதுமாகிய இவைகள் தெய்வமாகுமா..." என்று கூறினால் அவர்கள் மயங்குகிறார்கள். அதற்குமேல் உலகசம்பந்தமான ஆசைகளைக் காட்டினால் தூண்டில் இரைக்கு ஆசைப்படும் மச்சங்கள்போல் சிக்கிக்கொள்கிறார்கள். பிறகு அவர்களுக்கு உண்மை தெரிந்து தாங்கள் ஏமாந்துபோனதாக அறிந்து திரும்பி விடலாமென்றால் நாம் சேர்ப்பதில்லை. அந்தோ! என்ன கோரம்.

இப்புராணச் சங்கதிகளை விட்டு யோகம் ஞானம் இவற்றைப் பற்றிப்பேச அந்த அன்னியமத போதகர்களுக்குத் தெரியாது. ஆகையால் இக்காலத்தில் நமது மதத்தைச் சேர்ந்த பாமர ஜனங்களுக்கு இத்தகைய விஷயங்களைப்பற்றிப் போதித்து அவர்கள் பிறமத போதகர்களின் வஞ்ச வார்த்தைகளால் மயங்காம லிருக்கச் செய்யவேண்டும். கிருஸ்தவர்களுக்கு இது ஜீவனத்தொழிலாயிருக்கிறது. சம்பளம் கிடைக்கிறது. இதனால் அவர்கள் இதே வேலையாக விருந்து நம்மவரை மயக்கி இழுத்துக் கொள்கிறார்கள். தருமமும் காலத்திற்குத் தக்க வழியில் செய்யப்படவேண்டும். செல்வம் பொருந்திய மடாதிபதிகள் இச்சமயத்தில் தக்க முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டியது அவர்கள் கடமையாக விருக்கிறது. உண்மையீன மதாபிமானமுடைய எம்மடாதிபதியேனும் முன்வந்து இன்னும் மற்ற மடாதிபதிகளையும் கலந்து ஏற்பாடு செய்து இதைத் தடுத்து நம்மவரையும் நம் மதத்தையும் பாதுகாக்க ஒரு சங்கத்தைத் தாபிப்பார்களாயின் அது பெரும் புண்ணியச் செயலாகும். பசுபதியாகிய பரம்பொருளே இதற்கு அருள் புரியவேண்டும்.

ஞான மின்புக ழேமிக வேண்டுந்தென்
னால வாயி லுறையுமெம் மாதியே.

ஓம் தத் ஸத்.

கம்பராமாயண ந

'அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்ப
வித புருஷார்த்தங்களாகிய தர்மார்த்த காமமோக்ஷ
சாதனமாயிருப்பது கல்வியே யாம். அறியாமையை யக
கண் உய்த்தற்கேதுவா யிருப்பனவைகளே நூல்களென்றும், அவற
றலே கல்வி யென்றும் கூறப்படும். அத்தகைய நூல்கள் எண்ணிறந்
ந்தாய் மொழியிலுளவாயினும் அவற்றைக் கற்று இன்புறுவோர் மிகச் சில
ரினும் சிலரே யாவர்.

பதினெண் கீழ்க்கணக்கினு ளடங்கிய "நாலடி நானூறு நானூற்பது" முதலாகிய தனிப்பட்ட நீதி நூல்களைக் கற்போர் அரியோராக, இராமா யணம், பாரத முதலிய இதிகாச புராணங்களைக் கற்போர் பலராவர். அஃ தும் கதையை வாசிப்பதினளவிலேயே நிற்கின்றது. தின்பண்டங்காட்டி மருந்தூட்டுவதுபோல், கதைகளின் மூலமாகப் பல நீதிகளை யறிவித்தல் என்னும் முறைப்படி, கதையை யொட்டியும் உவமை, எடுத்துக் காட்டு வமை, வேற்றுப்பொருள் வைப்பு முதலிய அணிகளின் மூகமாகவும் ஆசிரி யர்கள் அப்புராணேதிகாசங்களினும் நன் னெறிகளைக் கூறிப்போந்தன ராயினமையின் அம்மூல பாடங்களிலுள்ள நீதிச் செய்யுள்களையும் ஆராய்ந் தறியவேண்டுவதும் அத்தியாவசியமா மென்க. ஆகவே ஒவ்வொரு நூலை யும் ஆசிரியர் மாட்டுக் கிரமமாகப் பாடங் கேட்டாலன்றி அஃதமையாது. ஆகலின் அவ்வாறறிய அவகாச மற்றோர் எளிதி னுணருமாறு அவற்றை யெடுத்துக் காட்டல் பொருத்த முடையதேயாம். அதிலும் அவை பல வாயும் ஆழ்ந்த பொருள்கொண்டவையாயு மிருத்தலால் முக்கியமான சில வற்றைக்காட்டி அவற்றின் நீதிகளையும் சுருங்கக் கூறலே யமையும்.

முதன் முதலாக, கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டார் அருளிச்செய்த ராமாயணத்தில் பொலிவுறும் நீதிப்பாக்களை யாராயத் தொடங்குவாம்.

1\. பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்தநேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றல்
(நாட்டுப்படலம்.. செய்யுள் 10.)

(இ-ள்.) "கோசல நாட்டில் உழவர் வயல்களிற் களைபறிக்கச் சென்று அவ்வயல்களில் நீலோற்பலம், தாமரை, குமுதம் முதலிய மலர்களே களையா யிருப்பதன்றி வேறு களையில்லாமையால், தங்கள் மாதர்களின் கண் கால் முகம் வாய் இவற்றை ஒத்திருக்கும் அம்மலர்களைப் பறிக்க மனமில்லாது திரிந்துகொண்டிருப்பர் (எ-று) இதனால், பெண்கள்பால் கொண்டுள்ள அன்பின் மிகுதியால் நன்மைதரும் முக்கிய கடமையைச் செய்யாதிருத்த லால், இவர் அறிவிற் சிறியோராவர். ஆகவே, சிறியோர் பெண்களின் நேசத்

...களைச் செய்யாது — களைகள் போன்ற
...ளைக் களையாது அப்பாசக் கட்டிலுளே வீழ்ந்து
...ருந்துவர். பெரியோர் அவ்வாறுகார் என்னும் நீதி
...பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றல்'
...வாக்கியம் உணர்த்துகின்றது.

.. தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே. (தாடகை வதை-15.)

கோசிக முனிவரும் தசரத குமாரரும் கானெறிப் படர்கையில் காணப் பட்ட பாலைவனமொன்று, 'மேன்மேல் தொடர்ந்துவரும் இருவினைகளை நீக்கி, தொலைத்தற்கரிய காம, வெகுளி, மயக்கங்களாகிய முப்பகைகளை யுஞ் செயித்து, முத்தியை யடைய விரும்புவோரது மனமும், விலை மாதர் களின் மனமும்போல் பசையற்றிருந்தது' என்பதாம். இதனால் வஞ்ச மாயப் பிறப்பொழித்து நிரதிசயானந்தப் பேரின்ப வீட்டை விழைவோர், வினையற்ற நிலையினை யெய்தல்வேண்டும். தீவினையைப்போலவே நல் வி... பும் நுகர்ச்சியின் பொருட்டுப் பிறவியைத் தருவதாம். "இருள்சேர் இரு ..." யென்றார் நாயனாரும். அதற்கு அந்தக்காரணத் துண்டாகும் மும் பகையைக் கடிதல்வேண்டும். அங்ஙனம் கடிந்தோரே மாசற்ற பரி ...லையாகிய பற்றற்ற நிலையடைவர். அதுவே வீடு. "விட்டதே ...வீடு," 'அற்றது பற்றெனில் உற்றதுவீடு.' 'பற்றுக பற்றுவிடற்கு' '...ராசை யுண்டேல் தெய்வமுண்டு' என்றார் பிறரும்.

'காசாசை வேசையர்' என்றபடி விலைமாதர் மனம் காசை நாடுமேயன்றி, அதை யீந்தார் மாட்டுச் சிறிதும் விருப்பமடையாது. ஆகலின் அவரிடம் ஆசை கொள்ளலாகாது. ஆசை யற்றோரிடம் ஆசையுய்த்தல் அவலமே. பொருந்தாப் புணர்ச்சியுமாம்" என்பவை வெளியாகின்றன.

3\. உளப்பரும் பிணிப்புறு உலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள். (தாடகை வதை 43.)

'ஸ்ரீராமா! மிகக் கொடிய அரக்கியாகிய தாடகை, அளவில்லாத வளப்ப மிகுந்த நகரங்களை யெல்லாம், உள்ளத்திற் பருமையாகிய பிணிப்படையாத உலோப குணமொன்றே அநேக நற்குணங்களை யழிப்பதுபோல, அழித்த னள்' எனத் தாடகையின் வரலாற்றைக் கோசிகர் கூறினார். இதில் உலோப குணமானது (உலோபம் = பொருளாசை, ஈயாமை) இரக்கம், அன்பு, இன்சொல், நடுநிலைமை முதலிய எல்லா நற்குணங்களையும் போக்கும். ஆகையால் அக்குணத்தை வெறுத்து நீக்க முயலல்வேண்டும் என்றும் போதனை யிருத்தல் காண்க.

4. அய்ய னங்கது கேட்டற னல்லவும் நூற்பகை
எய்தி னலது செய்கவென் றேவினல் மோகம்
மெய்ய நின்னுரை வேதமெனக் கொடு
செய்கை யன்றோ வறம்செய்யு மாறென்றான்

தாடகையைக் கொல்லவேண்டு மென்றுகோசிகர்கூறக் கோசலைசிறந்தனர் செவியுற்று "சுவாமி! பெண்கொலை பெரும்பாவம். ஆயினும், தருமமல்சில காரியமேனும் காலம் நேர்ந்தழி ஏவப்பட்டால், பெரியீர்! உமது வாக்கியத்தை வேதமாகக் கருதிச் செய்வதல்லவோ அறமாகும் என்றனர்" என்பதாம். இதினின்றும், குருவாதிய பெரியோரின் கட்டளை நியாயமற்றதாக வெளிக்குத் தோன்றினும் உண்மை யுணர்ந்த பரோபகார சிந்தை யுடையவர்களாகலின் நன்மையாகவே கொண்டு செய்தல் கடமையாம் என்பது விளங்குகின்றது. 'இனியவரொன் சொலினும் இன்சொல்லே' யன்றோ?

5. சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னன்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே.

(தாடகை வதை 72)

'இராமபிரான் தாடகையைக் கொல்லப் பாணத்தையேவ, சொல்லை யொத்த வேகத்தையுடைய அவ்வஸ்திரமானது, கல்வியறிவில்லாத மூடர்க்குறை வோர் கூறிய உறுதிமொழி நெஞ்சிற்றங்கா தெங்ஙனம் அகலுமோ அதுபோல், தாடகையின் மார்பிற்பட்டுப் பின்புறமுருவிச் சென்றது' என சில இதன் பொருளாம். இதில் இரு பொருளுள. (1) 'சொல்லொக்குங் கடிய ...சரம்?' எனச் சரத்தைச் சொல்லுக்கு ஒப்பிட்டமையால், புலவர் சினந்து கூறும் வாய்ச் சொற்கள் தவறாது துன்பம் பயக்கும், அதை நீக்க வியலாது. 'வில்லம்பினும் சொல்லம்பே மேலதிகம்' 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனும் காத்த லரிது' ஆதலின் பெரியோர் மாட்டு அபசாரப்பட்டு அவர்தம் கோபத்திற்குப் பாத்திரராகாமல் பணிவுடனொழுகி ஆசிபெற்றுய்தல் வேண்டும். இக்கருத்து இவ்விராமாயணத்தில் பிறவிடங்களிலும் காணப்படும். அவை பின்வருவன 'வைதவையின் மாமரம் ஏழ்தொளை யெய்த எய்தவன்' "சுடுசரமனையசொல்லால்" 'வைதாலன்ன வாளிகள்'. நாயனாரும் 'வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க-சொல்லே ருழவர் பகை' எனக் கூறியிருத்தல் காண்க.

(2) புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று' என்பது, கல்வியறிவில்லாத மூடருக்கு நல்லோர்கள் நீதிமொழிகளைக் கூறின் அவர் தம்மனத்திற் கொள்ளாது புறக்கணிப்பாராகலின் சிறிதும் பயன் படாது, என்பவை அறியத்தக்கவையாம். (இன்னும் வரும்)

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், இராணிப்பேட்டை.

...ர்களும் ஜாதியொற்றுமையும்

...கீழ்க்கண்ட விஷயத்தை ஸ்ரீமான் ரெவரெண்ட் ...ர் என்பவர் கடந்த அக்டோபர் மாதம் வெளிவந்த ...வ்யூ" (Indian Review) என்றசஞ்சிகையில் வெளியிட்டுள்ளார்:

...ந்திய சுதேச கிருஸ்தவர்களை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கலாம், ...ரோமன் காதலிக் கிருஸ்தவர், ஸீரிய கிருஸ்தவர்கள், புரொடஸ்டான்ட் கிருஸ்தவர்கள். ரோமன்காதலிக் கிருஸ்தவர்களே பெரும்பாலோர். ஸீரிய கிருஸ்தவர்கள் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களிலுள்ளோர். ஆயினும் அவர்களிற் சிலர் ஜீவியார்த்தமாகத் தங்கள் நாட்டைவிட்டு வெளிசென்றிருக்கிறார்கள். புரொடஸ்டான்ட் கிருஸ்தவர்கள் கொஞ்சமே யாயினும், அனேகம் வகுப்புகளாகவும் ஒன்றுக் கொன்று விரோதமுடையவர்களாகவுமிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலர் பாதிரிமார்களிடம் பிரசங்கிகளாகவும், உபதேசிகள், உபாத்திமார்கள், பைபிள் உமன் முதலியதொழில்களி லமர்ந்து அவர்கள் ஆதரணையின்கீ ழிருக்கிறார்கள்.

இந்நாட்டுக் கிருஸ்தவரில் எல்லாச் சாதிகளையும் வகுப்புகளையும் சேர்ந்த ஆண் பெண் குழந்தைகளைக் காணலாம். இவர்களில் அனேகரிடம் ஜ...க்கட்டுப்பாடு பலமாக விருக்கிறது. சிலர் ஒருவர் வீட்டில் ஒருவர் ...சிப்பதுகூட இல்லை. ஆயிரத்தில் ஒருவர்கூட உயர்ந்த ஜாதியாரல்ல. ...ஹிந்து மதத்திலிருந்து கிருஸ்துமதத்திற்குச் சென்றவர்கள், அவ்வாறு ...தில் மாறுதலடையும் முன், தங்கள் சொந்த தேசாசார ஒழுக்கங்களைக் கைவிடா திருந்தார்கள்—நித்தியஸ்நானம், சுத்தி, வீடுகளையும் குழந்தைகளையும் சுத்தியாக வைத்திருத்தல், தினம் வீடுகளைக் கோமயத்தால் மெழுகல், வாழையிலையில் போஜன மருந்தல், காலில் பாதரக்ஷையின்றிச் சாதாரணமான தங்கள் தேச உடையணிந்து தினம் கடவுள் சந்நிதிக்குச் செல்லல், ஆழ்ந்த பத்தியோடு கடவுளைப் பூசித்தல், உயர்ந்த ஜாதியாராயின் சாகபக்ஷணிகளா யிருத்தல், முக்கியமாய் மதுபானத்தை நீக்கியிருத்தல் முதலிய காரியங்களை யனுசரித்துக்கொண் டிருந்தார்கள்.

ஆனால் அவர்கள் கிருஸ்துமதத்தில் சேர்ந்ததே அனேக சந்தர்ப்பங்களில் அம்மாறுதல் அவர்களை வேறு நிலைமைகளில் கொண்டுபோய்ச்சேர்த்து விடுகிறது. முக்கியமாகச் சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் இதை அதிகம் காணலாம். அவர்களுடைய நித்திய ஸ்நானம், சுத்தி, சுகாதாரம், நித்தியபூஜை யாவும் அவர்களை விட்டு நீங்கிவிடுகின்றன. தாங்கள் கிருஸ்தவர்களாகிவிட்ட வரையில் தாங்கள் சுற்றத்தார் ஜாதியார் சினேகர் மற்ற இந்தியர் யாவர்களையும் விட்டு நீங்கிய ஒரு விசேஷ வகுப்பாரென்று எண்ணிக் கொள்கிறார்கள். இவ்வாறு அவர்கள் தேசாபிமானத்தை யிழந்தவர்களாகிறார்கள். சீக்கிரத்தில் தங்கள் தேசியசன்மார்க்

களையும், தேசிய தர்மங்களையும
பிறகு மெதுவாய் ஐரோப்பிய நீதியாய்
உடுத்தவும் நடத்தவும் ஆரம்பிக்கிறார்கள். மதபா[...]
விடுகிறார்கள். அவர்கள் நித்தியஸ்நானம் போய்விடுகி[...]
முறை சனிவாரம் ஸ்நானம் செய்தால் போதும் என்று கருதி[...]

ஹிந்துக்கள் பிறந்தது முதல் மரணபரியந்தம் மதப்பற்றும் [...] பக்தியு முடையவர்கள். அவர்களுடைய நித்தியவாழ்க்கையில் மதம் பிணைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் மதக்கருத்தை யுள்ளடக்கிக்கொண் டிருக்கிறது. ஆனால் அவர்கள் கிருஸ்தவர்களாகி விட்டால் மதவிஷயம் சௌகரியத்தையும் சுகத்தையும் பொறுத்ததாக ஆய்விடுகிறது. ஒரு கறுப்புச் சட்டையும், கால்சட்டையும், கால்களில் பாதரட்சையும் அணிந்து கொண்டு வாரத்தில் ஒருமணிநேரம், சில நாட்களில் இரண்டுமணிநேரம், கோயிலில் இருந்து விட்டால் மோக்ஷத்திற்குப் பிராயச்சித்துக் கிடைத்து விட்டதாய் எண்ணி விடுகிறார்கள்.

அவர்களுக்கு இந்தியாவின் க்ஷேமத்தைப்பற்றிய ஆசையேயில்லை. மிகச் சிலர்தவிர மற்றபேர் தாய்நாட்டின் க்ஷேமத்தைப் பற்றிய தேசியமகாசங்கம் (காங்க்ரஸ்), மஹாஜன சபை, சுயராஜ்ய சங்கம் (ஹோம்ரூல்லீக்),......... முதலிய வற்றில் சேர்வது மன்னிக்கக் கூடாத பாதகங்கள் என்று க[...]கிறார்கள். அவர்களுடைய பாதிரிமார்கள் அவற்றை விரும்பமாட்டார்[...] புரொடஸ்டான்ட் மிஷனில் வேலைசெய்வோர் இத்தகைய தேசியசம்[...]மான அல்லது இராஜாங்க சம்பந்தமான விஷயங்களில் சம்பந்தப்பட்[...] (இரண்டொரு சந்தர்ப்பங்களில் தவிர) வேலையினின்றும் நீக்கிவிடப்படு[...]வார்கள். பாபம் மயக்கத்தில் சிக்கியிருக்கும் இச்சனங்கள் மனதில் இது பீதியை யுண்டாக்கி விடுகிறது. அவர்கள் தேசிய நூல்களை வாசிப்பதில்லை. தங்கள் தாய்நாட்டைப்பற்றி அவர்களுக் கொன்றும் தெரியாது; தங்கள் சொந்தநாட்டு வீரர்களாகிய இராமர், கிருஷ்ணர், இராவணன் முதலியவர்களைப் பற்றியும், கவிவாணர், இரிஷிகள், மகான்கள் முதலியவர்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது.

அவற்றையறிய அவர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் அவையாவும் கிருஸ்துமதத்திற்கு விரோதமானவையென்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆகவே தாங்கள் ஐரோபாவைச் சேர்ந்தவர்க ளென்றே யவர்கள் கருதுகிறார்கள். தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் தெலுங்கு முதலிய தேசபாஷைகளைப் பேசவேண்டா மென்றும், இங்கிலீஷ் பேசவேண்டு மென்றும் கற்பித்து அவர்களுக்குத் தேசாபிமான மில்லாமலொழியும்படி செய்கிறார்கள். அநேகர் தங்கள் தேசப்பெயர்களையே யடியோடு மாற்றி ஆங்கிலப்பெயர் வைத்துக் கொண்டு தாங்கள் இந்தியரல்ல வென்று, யூரேஷிய வகுப்பில் சேர்ந்து கொள்கிறார்கள்.

[...]ளிட மிருந்து அடியோடு துடைக்கப்
[...]டிலுள்ள ஜனங்களோடு அவர்களுக்கு எதி
[...]கிருஸ்து தமது சீடர்களில் யாருடைய பெயரையும்
[...] அடியார்கள் இன்னது போசிக்கவேண்டும் இவ்வாறு
[...]செய்யவேண்டுமென்று கட்டளை யிடவில்லை. அவர் தாமே
[...]மான முடையவராக விருந்து எல்லா விஷயங்களிலும் வழிகாட்டி
[...]யாக விருந்தார்.

இந்தியர் கைக்கொண்டது ஐரோப்பிய வர்ணம் பூசிய கிருஸ்துமதம். இது சுதேச கிருஸ்துமதமே யல்ல. மேல்நாட்டுப் போர்வையோடும், மேல்நாட்டுத் தியானரீதியோடும், மேல்நாட்டு ஞானசாத்திரத்தோடும், மேல்நாட்டுப் பெயர்களோடும், இறக்குமதி செய்யப்பட்டது. பாபு கேஷப் சந்திரஸென் என்பவர் “ கிருஸ்து தமது பூட்ஸையும் தொப்பியையும் கழற்றி விடுகிற வரையில் அவருக்கு இந்தியாவில் நல்வரவு கூறமாட்டோம் ” என்று கூறினர்.

இந்தியா இந்தியர்களே ! நமது தேசாபிமானத்தை நாமேன் இழந்து விடவேண்டும் என்பதற்கு ஒரு காரணமுமில்லை. சுதேச கிருஸ்தவர்கள் ஐரோபியர்போல் நடிப்பதை விட்டுவிட்டுத் தங்கள் சுதேச சகோதரச் [...]தரிகளோடு ஒத்து நடந்துகொண்டால் இதுவரையி லிருந்துகொண்[...]க்கும் பிரிவினை மாயமாய் மறைந்துவிடும். இந்திய கிருஸ்தவர்கள் [...]ய வீரரைக் கனப்படுத்த வேண்டும். தாய் நாட்டின் க்ஷேமத்தில் ஆவ[...]வர்களாய் தேசிய சம்பந்தமான விஷயங்களில் சேர்ந்துகொண்டு பொது நலத்திற்கு உழைக்க வேண்டும். கிருஸ்துமதம் அன்பும், இரக்கமும், சமாதானமும் யாவரிடத்தும் நல்ல எண்ணமும் உடையது. இந்திய கிருஸ்தவர்கள் தங்கள் சொந்த இரத்தம், தங்கள் சொந்தத் தசையைச் சேர்ந்த ஹிந்து மஹம்மதியர்களோடு ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய் நடந்துகொள்ளா விட்டால் கிருஸ்து நாதரின் கொள்கைகளைத் தழுவி நடப்பவர்களாக எப்படி யாவார்கள் ? ”

குறிப்பு:—இந்த வியாசத்தால் நமது கிருஸ்துவ சகோதரர்களின் நிலைமை தெளிவாய் விளங்குகிற தன்றோ. இவர்கள் அன்னிய மதம்புகுந்ததால் தாய் நாடென்ற உணர்ச்சியற்றவர்க ளாகிறார்கள். விடுதலையடைவதற்குப் பதிலாக இவர்கள் மனம் பாதிரிகளால் விலங்கிடப்பட்டிருக்கிறது. அந்தோ! பாதிரிகள் நமது மதத்தாரைத் தங்கள் மதத்திற்குத் தந்திரமாய் இழுப்பது அவர்களுக்குத் தாய் நாட்டின் உணர்ச்சியற்றுப் போகச்செய்யவேயென்று நன்கு விளங்குகிறது.

தாய்நாட்டின் க்ஷேமத்திற்காகச் செய்யப்படும் முயற்சிகளில் உங்களைத் தலையிட வேண்டாமென்று தடுக்கும் மேல்நாட்டுப் பாதிரிமார்களின் எண்ணமென்ன வென்பதைச் சற்று சிந்தியுங்கள். தங்கள் தாய்நாட்டு விஷ

யத்தில் அவர்கள் தலையிடா திருக்கிறார்க . மற்றவர்களுக் கிருக்கலாகா தென்ற எண்ண பரலோகத்திற்கு வழிகாட்டும் தகுதியுடையவர்க விளங்கவில்லை. கிருஸ்தவ சகோதரர்கள் தங்கள் மனதில் யுணர்ந்து தாய் நாட்டின்மேல் அன்பு செலுத்திக் கிருஸ்துவின் பாத்திரர்களாக முயல்வார்களென நம்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

அரங்கமேடைகளும் முக்கிய சீர்திருத்தங்களும்

ஒரு தேசத்தாருடைய ஜீவிய சரித்திரத்தில், நாடகமானது மிகவும் முக்கியமான ஒரு பகுதியாயிருக்கவேண்டுவது அத்தியாவசியம். இவ்வத்தியாவசியத்தை நமது தமிழ்நாட்டு முன்னோர்கள் மறந்து கைதுறந்துவிட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் நமது புராதன தமிழ்க் காவியங்களில் இயல், இசை, நாடகம் ஆகிய இம்மூன்றும் மிகவும் பாராட்டப்பட்டு வந்ததாக நாம் படித்தும் கேள்விப்பட்டு மிருக்கிறோம். (ஆனால் நமது தமிழ்க்காவியங்களில் நாடகத்தைக் குறித்துப் பழைய காவியங்க ளிருப்பதாகப் புலப்படவில்லை) தமிழ் இலக்கியங்களில் நாடகத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறதே யொழியப் பற்பல நாடகங்கள் அக்காலத்தில் நடிக்கப்பட்டு வந்ததற்கு அத்தாக்ஷியாகத் தற்சமயம் பழைய காவியங்கள் ஒன்றும் இருந்ததாகத் தென்படவில்லை. இதனால் நம்மவர்களுக்கு நாடக ப்ரீதி குறைவாயிருந்ததாக எண்ணுவது தப்பாகும். நாடக முறையினால் ஜனங்களுக்கு நல்லெண்ணத்தையும் நற்புத்தியையும் புதியபுதிய விஷயங்களையும் மேடையினின்றே நன்கு போதிக்கலாம். ஆசாரசீர்திருத்தக்காரர்கள் தம் ஆயுள் முழுவதும் செய்யக்கூடிய ஜனசமூக ஆசார சீர்திருத்தங்களை நாடக மேடை மூலமாக அதினும் குறைந்த காலத்திற்குள்ளாகவே போதித்து ஜனங்களையும் ஜனசமூகத்தையும் நல்வழிப்படுத்தலாம்.

அம்மாதிரி உன்னதமான எண்ணங்களைக் கொண்ட நாடகச் சபைகள் நம் நாட்டில் தற்காலமிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. நாடகமே தொழிலாகவும் ஜீவனமாகவும் கைக்கொண்ட பல ஆண்பாலர்களும், பெண்பாலர்களும் நல்ல படிப்பாளிகளா யின்றி அரைகுறையாய்ப் படித்தவர்களாகவே யிருக்கிறார்களென்பது நமதெண்ணம். அவர்களுக்கு ப்ரதானம் பணமே யொழிய உண்மையான சிறப்பு முக்கியமன்று. அதனால்தான் நாடகத்தின் கௌரவமும் நடிப்பவர்களுடைய அந்தஸ்தும் தற்காலம் மிகவும் கேவலமா யிருக்கின்றன. அவன் என்ன கூத்தாடிதானே என, தற்போது ஜனங்கள் ஏளனமாகப் பேசுவதற்குக் காரணம் நடிப்போர்களது துர் நடையுடை பாவனையே யொழிய வேறொன்று மின்றும். நாடகச் சபையின் அல்லது கொட்டகையின் சொந்தக்காரர்கள் ஒரு இரவு ஒரு நாடகம் நடிக்கின், வரும்படி எவ்வளவு வருமென யோசனை செய்கிறார்களே யன்றி, பொது

...சன்மார்க்க வழிக்குக் கொண்டுவரலா ...ம். ...கப் புலப்படவில்லை. இவ் விஷயத்தில் நாட... ...கவிஷயத்தில் உயர்ந்த எண்ணம் கொண்டிருப்ப... ...து. உபயோகமற்ற நாடகங்களை ஜனங்கள் பார்க்கப் ...தற்குப் போதிய சான்றாம். தற்காலம் நம் இந்திய நாடகத் ஸ்திதியைச் சற்று ஆழ்ந்து யோசிக்குங்கால் சுமார் 50 வருஷந் தொட்டு நாடகம் நடிப்போரும், பார்ப்போரும் நாடகத்தின் உன்னதப் பெருமையைக் கெடுத்துத் தேசத்திற்கு ஒரு கெடுதி விளைவிப்பதாகவே எண்ணவேண்டி யிருக்கின்றது. இத்தகைய நாடகச் சிறப்பை மென்மேலும் போற்றிச் சீர்திருத்தி அபிவிருத்திக்குக் கொண்டுவரப் புதிய வழிகளைத் தேடவேண்டியது, இந்தியர்களுடைய கடமையாகும்.

நமது முன்னோர்கள் நாடக சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள சட்டதிட்டங்களை எவ்வளவுவரை தற்சமயம் நாம் பின்பற்றுகிறோமென்பதை நாம் கவனித்தல்வேண்டும். புதிய சட்டதிட்டங்களை உட்படுத்தி நாடகத்தையும், நடிப்பதையும் சீர்திருத்தின் பொது ஜனங்கள் குற்றங் கண்டுபிடிப்பார்களே யென நாம் வாளாவிருத்தல் நீதியன்று. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதை நாம் மனதில் பதித்துக்கொண்டு ஏவைகளைக் கழித்து ...வைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்பதை அனுசரித்தல் வேண்டும். ...வர்கள் நாடக பாத்திரங்களைப்பற்றிக் கொண்டுள்ள இழிவான எண் ...த ஒழிக்கத் தக்க முயற்சி செய்யவேண்டும்.

சென்ற சில வருஷங்களாக வித்யாபட்டம் பெற்றவர்களும், ஆங்கிலம் படித்தவர்களும் சிலர் நமது இந்திய நாடக விஷயத்தில் சிற்சில சீர் திருத்தங்கள் செய்ய முயன்று வருகின்றனர். ஆனால் அவர்கள் தம் முயற்சியில் எவ்வளவு ஜயமடைந்தார்களென நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. அதற்கு மாறாக நாடகத்திலும், நடிப்பவர்களிடத்திலும் ஒருவாறாகப் பொது ஜனங்கள் அலக்ஷியம் பாராட்டும்படி நேரிட்டதைக் குறித்து விசனப்படவேண்டியதா யிருக்கின்றது.

அத்தவறுதலுக்குக் காரணம் என்னவெனில்:—நாடகத்தைச் சீர்திருத்தி உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டு மென்பதுதான் ஆரம்பத்தில் அவர்களது எண்ணம். இரண்டுமூன்று நாடகங்கள்வரை ஆரம்பத்தில் கொண்ட எண்ணங்களைப் பின்பற்றியே நடத்துகின்றனர். பிறகு மெதுவாய் நாடகமே ஜீவனமாகக் கொண்டுள்ளவர்களது காற்று இவர்கள் பாலும் வீசி இவர்களுக்குள் அனாவசியமான மனஸ்தாபங்களும் வீண் சச்சரவுகளு முண்டாகி, பூர்வ எண்ணங்களெல்லாம் மாறுபட்டுச் சீர்குலைந்து போகின்றன. நாடகம் நடிப்பவர்கள் முக்கியமாக நன்னடக்கை யுடையவர்களாகவும் பரிசுத்த மனதுடையவர்களாகவு மிருத்தல் வேண்டும். அப்போதுதான் நாடகத்தைக் கண்ணுறுகின்றவர்களும் இவர்களைப் பின்பற்றி நல்வழியில் நட

...ந்து பரிசுத்த முள்ளவர்களா யிருக்க...
...ணடை இவைகள் நடிப்பவர்கட்கு அத்யா...
...டைய அல்லது ஒருத்தியுடைய கற்பையும் இதர...
மேலும் அபிவிர்த்தி செய்யவேண்டும்; கெடுக்கக்கூடாது. ...
குண சம்பன்னர்களா யிருந்தால்தான் நாடகத்தின் பெருமையே...
தற்கால நாடகமானது பார்ப்பதற்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்க...
யதாயிருக்கின்றது. பண்டைக்காலத்தி லனுசரித்த நாடகசட்டதிட்டங்களை
முழுதும் தற்சமயம் கவனிக்காவிடினும் பாதகமில்லை. நமது தேசிய நடை
யுடைபாவனைகளைச் சாராத நூதன அன்னிய பழக்கவழக்கங்களை நமது
இந்திய நாடகத்தில் அனுசரிக்க ஆரம்பிப்பது நன்கன்று. இம்மாதிரி நாம்
கூறுவதால் நாடகாபிமானிகளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணினும் பண்
ணலாம். ஆயினும் பாதகமில்லை. இதனால் கெட்டதைக் கெட்டதென்று
கூறாமலும் சீர்திருத்தம் செய்யாமலு மிருக்கக்கூடாது. நடிப்பவர்களின்
நடையுடை பாவனைகளிலும், நாடகமேடையின்மீதுள்ள திரைமுதலியவை
களிலும், நாடகத்திற்குத் தேவையான சங்கீத சாஹித்யங்களிலும் சீர்
திருத்தம் இதுவரை உண்டானதாகப் புலப்படவில்லை. நன்றாக வரையப்
படாத நாடகங்கள் பல நடிக்கப்பட்டு வருகின்றன. இவைகளை நிறுத்த
யாதொரு முயற்சியும் செய்யப்படவில்லை. நாடகங்களைச் சீர்திரு...
எண்ணமுள்ளவர்கள் கூடச் சாதாரண ஜனங்களின் வேண்டுகோட் கிண...ற
உபயோகமற்ற நாடகங்களை நடிக்க ஆரம்பிக்கின்றனர். இவ்வி...பல
மிகவும் கண்டிக்கத்தக்கதே. விசனிக்கத்தக்கதே. "அந்த நாடகம் ...சில
யிருக்கிறதே, ஜனங்களுக்கு நல்லறிவைப் புகட்டுமே? ஏன் உமது சபையார்
நடிக்கக்கூடாது" என்று ஒரு நாடக முதலாளியைக்கேட்கின், அவர் "அது
ஜனங்களுக்குப் பிடிக்காது, அதனால் வரும்படியிராது" என்று பதிலளித்த
தைக் கேட்டு மன வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. நாம் நமது இச்
சையில் எத்தகைய கேவலமான நிலைமைக்குள்ளாகி விட்டோமென்பதைத்
தீர்க்காலோசனைசெய்து தற்சமயமுள்ள கெடுதிகளைப் போக்கி நன்மைகளை
உண்டுபண்ண முயலவேண்டும். தமிழில் தற்காலம் நடிக்கும் நாடகங்களி
லுள்ள சில ஆபாசங்களைச் சற்று கவனிப்போம். கதை பாரிஜாத புஷ்பஹர
ணம்; மணி அடித்துத் திரையைத் தூக்கியதும் நாடகத்தில் முதல் வரும்
மனுஷனோ, மனுஷியோ ஒரு ஹிந்துஸ்தானி பாட்டோ அல்லது ஆங்கில
வர்ணமெட்டோ ஒன்று பாடினால்தான் நாடகம் பார்ப்போர் சந்தடி செய்
யாமலிருப்பார்கள். கதைக்கும் இப்பாட்டுக்கும் சம்பந்தம் என்னவோ
புரியவில்லை. மறுபடியும் சத்தியபாமா வேஷத்தைச் சற்று கவனிப்போம்.

இப்பெண்வேஷம் போடுபவன் ஒரு ஆண்பிள்ளை; உடையோ இருப
தாம் நூற்றாண்டில் வழங்கிவரும் உன்னத உடை; நகையும் அப்படியே;
பேச்சோ சத்தியபாமா அந்தஸ்துக்குரிய பேச்சன்று. இதே மாதிரிதான்

...ரின் நடையுடைபாவனை. மற்றொரு
...ம். இராமாயணம்—இராமர் இலக்ஷ்மணர் வேஷம்
...வெல்வெட்டினால் தைத்த சொக்காய், நிஜார்கள்
...விஸ்வாமித்ர மஹரிஷியுடன் காட்டுக்குப் போவது
...ர் கைகேயிகேட்ட கொடுமை வரத்திற் குட்பட்டு இராமரைக்
...னுப்புவித்ததின் பலனாக அவர் மனம் பிளந்து இரண்டு வில்
...த்த சோபாவில் படுத்துப் பாடிக்கொண்டே மரணமடைவதும், அப்
பாட்டைக்கேட்டு ஆனந்தித்த ஜனங்கள் இன்னும் ஒரு தடவை என்று
கேட்க, மரணமடைந்த தசரதர் எழுந்து ஜனங்களது வேண்டுகோட் கிண
ங்கி மறுதடவை பாடுவதும் என்ன வழக்கமோ கிஞ்சித்தும் புரியவில்லை.
(இது அறிவாளிகள் நகைக்கத்தக்க அசம்பாவிதம்.)

கடைசியாகச் சதாரம் சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். இந்நாட
கத்தில் திருடனாக நடிப்பவன் காலில் சலங்கைகட்டிக்கொண்டு, டப்பா முத
லிய பாட்டுக்களைப் பாடிக்கொண்டு கூத்தாடவேண்டுமென எச் சாத்திரம்
முறை யிடுகின்றதோ நாமறியோம். இத்தகைய ஆர்ப்பாட்டம் செய்து
கொண்டு திருட்டுவேலை செய்பவன் இந்த உலகத்திலில்லாத திருடனாகவே
யிருக்கவேண்டும். இம்மாதிரி உதாரணங்களை விரிக்கின் பெருகும்.

குறிப்பு:—இத்தகைய முக்கியமாகிய அரிய பெரிய விஷயத்தைப்
பரோபகாரமாக மித்திரன் வார அனுபந்தத்தில் வெளியிட்ட ம-ா-ா-ஸ்ரீ,
...ய்வேலி கிருஷ்ணமாச்சாரியர் அவர்களுக்கு நம்மனமார்ந்த வந்தனத்தை
...ர்புடன் செலுத்துகின்றோம். ஷை அய்யரவர்கள் வரைந்த விஷயத்
...யே நம் நண்பர்களுக்காக நமதானந்தனுக்கு வரைந்தனுப்பலாயினேன்.

ஏ. வ. குப்புசாமி முதலியார்,
ஏழூர், ராசிபுரம் தாலூகா.

குறிப்பு:—தற்கால நாடகங்களில் நாடக இலக்ஷணம் கவனிக்கப்படு
வது அரிதே. நாடகத்தில் அபிநயம் முக்கியமானது. சமயத்திற்கும் சந்
தர்ப்பத்திற்கும் தக்க மனோ உணர்ச்சிகளை இயற்கைப்படி வெளியிடவேண்
டும். உடைகள் கூடியவரையில் நாடக பாத்திரங்கள் சரித்திரம் நிகழ்ந்த
அக்காலத்தில் எந்தரீதியாக உடையணிந் திருந்தார்களோ அவ்வாறேயணிய
வேண்டும். உடைவிஷயத்தில் மேல்நாட்டார் நாடகங்களில் அந்தந்தக்கால
ரீதியாகவே உடுத்துகிறார்கள். வனவாசத்தி லிருக்கும் இராமர் கலிகதுரா
வைத்த தொப்பியும், போலிச்சரிகை தைத்த உடைகளும் அணிவதும்,
மயானங்காக்கும் தோட்டி விலையுயர்ந்த சால்வையும், சரிகையுடையுமணி
வதும் அசம்பாவிதமே யாகும். நாடகங்களிலுள்ள ஆடவர், மாதர் இவர்க
ளில் பலர் துர்நடக்கையே பொதுவாய் நாடகக்காரர்களுக்கு இழிவான
பெயரை யுண்டாக்கியது. நாடகத்தில் சம்பந்தப்பட்ட சில அயோக்கியர்
குடும்பமாதரைச் சோரமாய் அழைத்துச் சென்றதும், பிறகு அவர்களையும்
நாடகத்தில் நடிக்கச்செய்ததுமாகிய இத்தகைய காரியங்கள் இழிவையதிகப்
படுத்தின. காலஞ்சென்ற ஸ்ரீமான் அப்பாவுப்பிள்ளை முதலியவர்களைப்போல்
நாடக முதலாளிகள் நாடகத்தில் சம்பந்தப்பட்ட ஆட்களின் நடக்கையில்
தவறுநேராவண்ணம் கண்டிப்பாய்க் கவனித்து வந்தால் இழிவானபெயர்
வாராதென்பது நிச்சயம்.

பத்திரிகாசிரியர்.

ஒழுங்காலை.

(திருவல்லிக்கேணி அரசினர் பெண்
நாகை நீலாம்பிகை அம்மை செய்த விரி
(144-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்ஙனம் காணப்படும் புகையைக்கொண்டு காணப்படாத நெருப்பை உ... வதுதான் தருக்கமெனப்படும். இன்னும், நாம் குழந்தைகளாய்ப் பிறந்து பால் பருகத்துவங்கிய நாள்முதல் நம்மோடு தர்க்க உணர்வும் வளர்ந்து கொண்டு வருகின்றது. எவ்வாறெனின், ஒரு குழந்தை பால் பருகும்போது தாயையும் பாலையும் அறிந்து பிறகு பசித்து அழும்போது தாயைக் கண்டபின், முன் அவள் பலமுறை பால் கொடுத்திருக்கின்றாளாகலின், இவள் இப்போதும் எனக்குப் பால் கொடுப்பாள் என்று உணர்ந்து அழுகையை நிறுத்தி விடுகின்றதன்றோ! இவ்வாறு நடக்கப்போகும் செயல்களை நடந்ததைக் கொண்டு ஆராயும்போது தர்க்க உணர்வு உண்டாகின்றது. புறப்பொருளை யளக்கும் கணக்குக்கும் அகப்பொருளாகிய கடவுணிலை துறக்கநிலை முதலியவற்றை விளக்கும் அகப்பொருள் ஆராய்ச்சிக்கும் தர்க்கம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. புறப்பொருளை யாராய்தற்குக் கருவியாகிய கணக்கை ஆராய்ந்த பின்னரன்றோ அகப்பொருளை ஆராய வல்லவர்களாகின்றோமென்று நினைக்கலாம். ஆனால், புறப்பொருளாகிய கணக்கை யாராய்கின்றபோதும் தருக்க உண... கியே முன்னின்று அக்கணக்கறிவையும் உண்டாக்குகின்றது. அதற்கு... துக் காட்டாக, ஒன்று ஒன்றாகப் பத்து மாம்பழங்களைக் கூட்டினால் தொகையைப் பத்தென்று சொல்லுகின்றோம். அப்பத்தில் நான்கு நீல விட்டால் ஆறு என்று எண்ணிப் பார்க்காவிட்டாலும், ஆறு இருக்கவேண்... மென்று பார்த்ததைக் கொண்டு பாராததை யுறுதியாகச் சொல்லுகின்றோமல்லவா! இவ்வாறு ஆராய்வதும் தருக்கமே; அதாவது அளவை யுணர்வேயாகும். புறப்பொருளையாராயும் கணக்கை நாம் கற்கவேண்டுவது உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாயினும் அகப்பொருளாகிய கடவுள் நிலை உயிரின் நிலை முதலியன புறப்பொருளினும் மேன்மை யுடையனவாகலின், அதனை ஆராய்ந்து கற்றற்கே கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். புறப்பொருளை யளக்கும் கணக்குக்கும் அகப்பொருளாகிய கடவுள் நிலை உயிர்நிலை முதலியவற்றை யளக்கும் ஆராய்ச்சிக்கும் தர்க்கம் பொது. புறப்பொருளாராய்ச்சியில் நிற்கும் தர்க்க வுணர்வால் எண்ணியறிதற்குரிய புறப்பொருள்களை யாராய்ந்து படிக்க முடியுமேயல்லாமல், பிழையின்றி எழுதவும் படிக்கவும் அது உதவிசெய்யாது. இலக்கணத்திற்கே தருக்கம் சிறப்பாக வேண்டப்படும். ஆதலினால், திருவள்ளுவநாயனார் எண் என்னுஞ் சொல்லுக்குத் தருக்கமென்னும் பொருளைத் தந்து அத்தருக்கத்திற்குக் கருவியாகிய எழுத்தென்னும் இலக்கணத்தைப் பின்னுமாக வைத்து "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" என்று கூறினாராகலின், எண் என்னும் சொல்லுக்குக் கணக்கு என்று பொருள் கூறலாகாது. நாம் நூல்களியற்றுதற்கும் விரிவுரைகளைச் செய்தற்கும் செய்யுளியற்றுதற்கும் அகப்பொருளாராய்ச்சியாய் நிற்கும் தர்க்கமும் அத்தருக்க நூலுணர்ச்சிக்குக் கருவியாகிய இலக்கணமும் இன்றியமையாதனவாம். யான் மேல்விளக்கிக் காட்டிய

...ணக்கைக் குறைவாகப் பேசுகின்றே

...நம்மவர்களில் பெருந்தொகையினரான பெண்பாலர் ...ர்கள். ஆனாற் பள்ளிக் கூடங்கள் புறப்பொருளாராய்ச்சி ...லைக் கட்டாயக்கல்வியாக ஏற்படுத்தி, அதனினும் சிறந்த ...க் கல்வியைக் கட்டாயமல்லாத கல்வியாக ஏற்படுத்தி யிருக்கின் ...ர்கள். பள்ளிக்கூடங்களில் நமக்கு ஆங்கிலமொழியினையும் தமிழ்க் கல்வியினையும் போதுமான இலக்கணக் கல்வியின்றிக் கற்பிக்கின்றாராகலின், நாம் பள்ளிக் கூடத்தில் பல ஆண்டுகள் முயன்று இருமொழியினையும் கற்றாலும், நாம் ஒரு மொழியிலேனும் பிழையின்றி ஒரு நூலேனும் ஒரு செய்யுளேனும் ஒரு விரிவுரையேனும் இயற்ற ஆற்றலற்றவர்களா யிருக்கின்றோம். இவ்வாறு போதுமான இலக்கணக் கல்வியின்றிப் பெருந்தொகையான நம் பெண்மக்கள் கல்விகற்றாலும் நாம் உலக நன்மைக்கும் நமது பெயர் உலகில் நிலை பெறுதற்கும் தக்கபடி நூல்களையும் செய்யுட்களையும் இயற்ற வலுவற்றவர்களாய் இவ்வுலகை விட்டு நீங்குவோமாயின், நம் பேரும் புகழும் நம்மோடே நீங்குமல்லவோ! நம்மவர்களில் பெண்பாலர் பள்ளிக்கூடப் படிப்பை முடித்த பின்னரேனும், தாம் பள்ளிக்கூடங்களில் சிறிதளவாகக் கற்ற இலக்கண உணர்வைப்பெருக்கி நூல்களெழுத முயல்கின்றார்களாவென்றால், அதுவுமில்லை. ஆங்கில மக்களில் பெண்பாலாரிற் சிலர் பள்ளிக்கூடப் படிப்பை முடித்த பிறகு தாம் சிறிதளவாகக் கற்ற ...லக்கண வுணர்வைப் பெருக்கித் தங்கள் காலத்தை வீணாக்காது உலக ...மைக்காகப் பல நூல்களையும் எழுதுகின்றனர். பலவிரிவுரைகளையும் ...ய்கின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னே யிருந்த நூற்றுக் ...க்கான தமிழ்ப் பெண்கள் தம் தாய்மொழியாகிய செந்தமிழை யிலக்கணக் கல்வியோடு பிழையறக் கற்றுக் "கலித்தொகை" "புறநானூறு" "ஐங்குறுநூறு" முதலிய நூல்களில் தீஞ்சுவையினையுடைய செய்யுட்களை யியற்றி யிருக்கின்றார்கள். அவர்களில் இருவரை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். நச்செள்ளையாரென்னும் அருந்தமிழ்ப் புலமை வாய்ந்த பெண்மணி சேரலாதனென்னும் சேரமன்னனைப் புகழ்ந்துபாட, அவன் அவள் அங்ஙனம் சொற்சுவை, பொருட்சுவை முதலியன விளங்கப்பாடிய செய்யுட்களைக் கண்டு அவள் நுட்ப அறிவின் வன்மையைப் பெரிதும் புகழ்ந்து அவள் அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும் ஆயிரம் பொற்காசும் இனுமாகக் கொடுத்தனன். அதுவுமன்றி, அவள் அவ்வரசன் பக்கத்தே வீற்றிருக்கும் பெருஞ் சிறப்பையும் பெற்றாள். இன்னும், இவள் காக்கை கரைந்தமைபற்றி மிகவும் அருமையாகப் பாடினமையால், அறிவுடையோர் பலரால் தரப்பட்ட காக்கை பாடினி என்னும் பெயரையும் பெற்றாள். இவள் இயற்றிய செய்யுளிலக்கணத்தினின்றும் பலபாடல்கள் "யாப்பருங்கலக் காரிகை" என்னும் செய்யுளிலக்கண நூலிற் காணப்படுகின்றன; அவற்றுட் சிலவற்றை யீண்டுக் கூறுகின்றேன்.

« நீர்த்திரை போல நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச் சுரிதகந்
தாக்கித் தொடுத்த தாவிலொடு வெனவும்

யாப்புற்றமைந்த அம்போ தரங்:
" அளவடி யந்தமும் ஆதியுமாகிக்
குறளடி சிந்தடி யென்றா யிரண்டு
மிடைவர நிற்ப தினைக் குறளாகும் "

இனி ஆதிமந்தி என்னும் பெண்மணியும் கல்வியில் வல்லவளாய்ச் சிறந்த திருமாவளவனெனச் சிறந்த கரிகாற்சோழன் அருமை மகளாவள். ... சேரனாட்டுமன்னன் ஒருவனை மணந்தவள். இவள் தன் கணவனுடன் தன் தந்தை கரிகாற் சோழனால் ஓர் ஊரில் கொண்டாடப்பட்ட புதுப்புனல் திருவிழாவுக்குச் சென்றபோது, இவளறியாதபடி இவள் கணவன் காவிரி யாற்றில் விளையாடிக்கொண் டிருக்கும்போது அவனைக் காவிரிநீர் அடித்துக் கொண்டு போய்விட்டது. அப்போது அவள் தன் கணவன் நீரில் மறைந்த தறியாமல்,

" மன்னர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே யென்கைக்
கோடீரிலங் குவளை நெகிழ்த்த
நாடுகெழு குரிசிலு மாடுகளமகனே"

என்னும் அரிய பாடலைப் பாடினார். இவ்வாறு இலக்கணச்சுவை, பொருட் சுவை முதலியன விளங்கப் பாடிய அப்பெண்மணிகளின் பாட்டுக்களைப் போல் இக்காலத்து ஆண்மக்களுங்கூடப் பாட இயலாதவர்களா யிருப்பது போதுமான இலக்கணக் கல்வி யின்மையினாலே யாம். அன்றோ! நாம் பல ஆண்டுகளாகப் பள்ளிக்கூடத்தில் போதுமான இலக்கணக் கல்வி யின்றிக் கற்றும் நாம் அடைந்த பயனென்னை? இனிமேலாயினும், பெண் மக்களாகிய நாம் கண்விழித் தெழுந்து பள்ளிக்கூடத்திற் கற்பிக்கும் சிறிதளவான இலக்கணத்தையும் கருத்தூன்றிப் படித்துப் பள்ளிக்கூடத்துப் படிப்பை முடித்தபின்னர் அவ்விலக்கணக் கல்வியை மேன்மேலும் பெருக்கி நம்மறிவை அறியாமையினின்றும் நீக்கி உலக நன்மைக்காகப் பலசெய்யுட்களையும், நூல்களையும், விரிவுரைகளையும் இயற்றி நன்மையடைய முயலுவோமாக!

இல்லறம்—கன்மம்.

(180-ம் பக்கத் தொடர்ச்சி).

இதனால் ஸ்நானத்துக்குப் பிரத்தியட்ச பலனும் சூட்சும பலனும் கூறப்பட்டது. இக்காலை ஸ்நானத்தினால் பெறக்கூடிய நற்பயன் மற்றெவற்றாலும் அடைய முடியாது. இனி சந்நியாசிகளும் பெண்களும் விடிந்த பிறகே முழுகவேண்டுமென்றது அவரது சரீரநிலைமையை நோக்கியேயாம். அஃதெங்ஙனமெனிற் கூறுதும். பெண்களுக்குச்சரீரம் முற்றும் சோணிதம் நிறைந்திருக்கு மென்றும் அதனால் அவர்களுக்குக் காமம் மிகுதியாயிருக்கு மென்பதும் அவர்களது சரீர இலக்கணமாம். அச்சோணிதம்சரீரத்தில் உறைந்து நின்றாற் பற்பலநோய்களை யுண்டாக்கும் என்பதுவைத்தியநூற் கொள்கையாம். ஆதலால் அச்சோணித முறுதி வெளியிற் செல்லவேண்டும். சந்நி

...லம் சுண்டவேண்டும். இதனால் ...ண்டாகும். ஆதலாற்றான் அவர்கள் சூரியகிரணஞ் செய்ய வேண்டுமென்ற விதி யேற்பட்டது. இந்த ...வேறுபாட்டால் சிறிது பேதப்படும்; எங்ஙனமென்னில் ... முன்பனி யதிகமாதலால் அக்காலத்தில் சிறிது சூரியகிரணப்பட்ட பின்னரே ஸ்நானம் செய்யவேண்டு மென்றும், வைசாக ...த்தில் உஷ்ணம் தோன்றுவதற்கு முன்னரே ஸ்நானம் செய்யவேண்டுமென்றும் புராணங்கள் கூறுகின்றன. உஷ்ணமிகுதியான காலத்தில் குளிர்ந்திருக்கும்போதும் குளிர்ச்சி மிகுதியான காலத்தில் சிறிது உஷ்ணம்தோன்றிய பிறகும் ஸ்நானம்செய்வது நன்மையென்பதும் புராணங்களின் கருத்து. அதுபோலவே சரீர வேறுபாட்டாலும் சிறிது பேதப்படும். சடைதரித்தவன், கபரோக முள்ளவன், தலைநோயுள்ளவன், சுமங்கலியான பெண் இவர்கள் கழுத்தளவு குளித்தாற் போதுமென கௌதமாதி மஹரிஷிகள் கூறியிருக்கின்றார்கள். இவையெல்லாம் சரீர சௌகரியத்தை உத்தேசித்தே யெழுதிவைத் திருப்பதினால் ஒழுக்கந்தவறாது நடப்பவர்களுக்கு ஔஷதப்பிரயோகம் அடிக்கடி வேண்டப்படுவது அவசியமன்றெனப் புலப்படும்.

அகமருஷணம் முதலிய மந்திரஜபத்தாலும் பரமேசுவர தியானத்தினாலும் மறுமைப்பயனும் விதிக்கப்பட்டது. காலையிலன்றி மற்றையகாலங்களில் ஸ்நானம்செய்து செய்யவேண்டிய கிரியைகளைச் செய்துவந்தாலும் மறுமைப்பயன் குறைவுபடாது. காலை ஸ்நானந்தவறினால் சரீரசுகமாகிய இம்மைப்பயன் கெடுவது நிச்சயமாதலாற்றான் அதேகாலத்தில் ஸ்நானஞ் செய்யவேண்டு மென்ற கட்டாயவிதி யேற்படுத்தப்பட்டது. பெரிய நீர் நிலையத்திலேயே ஸ்நானம் செய்யவேண்டும். "அதிக நீருள்ள இடம் கிடைக்குமானால் சிறிய தண்ணீரில் முழுகக்கூடாது" என்று ஸ்மிருதி கூறுகின்றது. ஓடுகிற தண்ணீர் கிடைக்குமானால் நிற்குந்தண்ணீரில் முழுகக்கூடாது. ஓடுகிற தண்ணீரிலேயே முழுகவேண்டும். நீர்வரும் முகத்திற் கெதிராய் நின்று முழுகவேண்டு மெனபது நித்தியவிதி கூறுமிடத்துரைத்தாம். ஆண்டுக்காண்க. நிற்குந் தண்ணீராகிய குளம் முதலியவற்றில் குளிக்கநேர்ந்தால் சூரியனுக் கெதிர்முகமாக நின்று குளிக்கவேண்டும். அங்ஙனம் செய்வதால் சூரியனை நோக்கியெழும் ஆவி சரீரத்துட் செல்லுமென்பது கருத்து. அதிலும் சமுத்திரத்திற் சென்று கலக்கும் நதியில் ஸ்நானம் செய்தால் அதிக நன்மை. அதுவும் நித்தியவிதியில் விளக்கப்பட்டது. ஆதலாற்றான் சாந்திராயண விருதம், மூன்று கிருச்சிரம், முப்பதினாயிரம் காயத்திரி ஜபம் சமுத்திர காமினியாகிய நதியில் ஸ்நானம் இவைகள் சமபலனை மென்று ஸ்மிருதிகள் கூறின. சரீரம் உண்டாகும் புறமும் சுத்தியாவதற் குரிய அம்சங்களெல்லாம் சமுத்திர காமினியாகிய நதியிற் கலந்திருக்கின்றன வென்பது மஹரிஷிகளின் கருத்து. தாமிரபரணி முதலிய சிலநதிகளில் தாமிரம் ஈயம் முதலிய அணுக்களும், காவேரியில் சொர்ண அணுக்களும், துங்காநதி முதலியவற்றில் அப்பிரக அணுக்களும், கங்கையில் பல தாதுக்களின் அம்சங்களுமுண்டு. ...லேயே தாமிரபரணியில் தவமும் காவேரியில் ஊக்க உற்சாகமும், கங்கையில் நல்லஞானமும், சமுத்திரத்தில் எல்லாமும் சித்திக்குமென்று புராணங்கள் கூறுகின்றன. ஆயினும் சமுத்திரத்தில் எக்காலமும் ஸ்நானம் செய்

வது கூடாது. சூரிய சந்திரகிரணம் ம...ர்
களிலேயே ஸ்நானம் விதிக்கப்பட்டது. அ...
களால் சமுத்திரத்தின் சத்தி சிறிது குறைவுபடும்.
விதிக்கப்பட்டது. சூரிய சந்திரகிரகண காலங்களிலு...
நற்பயனளிக்கு மென்பது நூல்களின் கருத்து. இது எல்லா...
ந்து கொள்வது அருமையாதல் பற்றி நமது பெரியோர் தாம் கண்ட
விஷயங்களில் எழுதிக் கட்டாய விதியாக ஏற்படுத்தியுள்ளார். இத...வு
கர்மமெல்லாம் பயனுள்ளனவே யென்று கண்டுகொள்ளலாம். நித்தியவிதி
கூறுமிடத்து இவற்றைச் சிறிது விளக்கினும், ஈண்டு சமையம் நேர்ந்தமை
யால் ஆண்டுக்கூறப்படாத சிலவற்றை விரித்தோம்.

இனி மறுமைப் பயனைக் கொடாத சிலகன்மங்களும் உண்டு எனினும் இம்மையில் எல்லாக் கன்மங்களுக்கும் பலனுண்டென்று கொள்க. இம்மை மறுமைப் பயன்களைத்தரும் கன்மம் நித்திய மெனப்படும். இம்மைப்பயனை மட்டிலளிப்பது காமியம் எனப்படும். இம்மைப் பயனைத்தரும் கருமத்தை விட்டால் அதன் பயனை வேறெவ்வகையிலாவது பெறுவது கூடும். இருமைப் பயனுள்ள ஓர் கன்மத்தை விட்டொழித்தால் மறுமைப்பயன் மற்றெவ்வகையிலும் பெறக்கூடாது. ஆதலால் அதை விட்டவனை ஆரியனென்று நமது முன்னோர் கொண்டதில்லை. ஆதலாற்றான் மஹரிஷிகள் அதனை நிர்ப்பந்தித்துச் செய்யத் தூண்டினர். இதனால் கன்மம் என்பது நமது ஆரியப் பெரியாரால் கண்டு அடையப்பட்ட ஒரு கற்பகதருவென்பதும் இப்பாதத்திலேயே முளைத்துச் செழித்துத் தழைத்து நற்பயன் அளிக்கின்றதென்பதும் கொள்ளக் கிடந்தது.

இனி கன்மம் அநாதியாயின் அதற்கு அந்தமுமில்லை யாதலால் அது பிரமஞானத்தால் ஒழியுமென்பது பொருந்துவதில்லை. எதற்கு ஆதியில்லையோ அதற்கு அந்தமுமில்லை. ஆதலால் அநாதியாகிய கன்மம் பிரமஞானத்தால் எப்படி யொழிவது கூடுமென்று ஒரு சாரார் கூறுவர்.

அநாதியாயுள்ள சில பொருள்களும் நசித்தல் உலகத்தில் பிரத்தியட்சம். வித்தினின்றே முளைகள் தோன்றி யதினின்றும் வித்துத் தோன்றி ஒன்றுக்கொன்று காரணகாரியமாய நிற்பது பிரத்தியட்சம். அவ்வித்தை வறுத்தால் அது முளைக்கும் சக்தியற்றுப் போகின்ற தென்பது பிரத்தியட்சமல்லவா? அதுபோலப் பிரமஞானமாகிய பெருந்தியால் தகிக்கப்பட்ட கன்மம் பிறப்பை யுண்டாக்கும் சக்தியற்றுப்போ மென்பதே திண்ணம். வறுத்த விதையை நல்ல நிலத்திலிட்டு நல்ல தண்ணீருற்றி வளர்த்தாலும் அது முளைப்பதில்லை. முளைப்பதற்குக் காரணங்களாயுள்ள நீரும் நிலமுமிருந்தும் அது முளையாததுபோல பிரமஞானத்தால் தகிக்கப்பட்ட ஆன்மா மீண்டும் சரீரத்தைப் பெறாது. பிரமஞானத்தால் கன்மம் முற்றுந் தகிக்கப்பட்ட ஜீவனுக்கு முக்தியே கதியாகும். கன்மம் முற்றுமொழிவதே மோட்சமென்பதே நூல்களின் துணிபு. பிரமத்தைப் பற்றிய ஞானமே யன்றி மற்றைய எவ்வகைப் பொருள்களைப்பற்றிய ஞானமும் பிறப்பை ஒழிக்குமாற்றலுடையதல்ல.

பிரமஞானம் ஒன்றனாலேயே முக்திபெறுவது நிச்சயமாயின் கன்மத்தாற் பயன்யாது எனின் முக்திக்குப் பிரமஞானமே முதற் காரணமென்பது

...த ...மும் சத்திபெறுவிடில் உண்மை
... சத்திக்குக் கன்மத்தை யன்றி வேறு
.... ஆதலாற்றான் "கன்மத்தான் ஞானமுண்டாம்"
...றினர். அந்த ஞானத்தைப் பெற்ற மெய்ஞ்ஞானிகளும்
...ல் பெறுதற் பொருட்டும், அதை யனுஷ்டித்து உலகத்தார்
...பெறுதற் பொருட்டும் கன்மத்தை முயன்று செய்வார்கள். முமு
...க்களும் பிரமஞானம் நிலைபெறற் பொருட்டுக் கன்மத்தை யனுஷ்டிப்
பார்களாதலால் பத்தர்களாகிய ஏனையருக்குச் சொல்லவேண்டுவதில்லை. பத்
தர்களுக்கும் இக்கன்மத்தால் ஒரு காலத்தில் நல்லறிவு உதிக்கும் ஆதலால்
எல்லாரும் கன்மத்தை யனுஷ்டிப்பதே நலமா மென்க.

இக்கன்மத்தைப்பற்றிய இரண்டொரு கேள்விகளை யெடுத்துக் காட்டி அவற்றிற்கு நாம் கூறியிருக்கும் சமாதானங்களைச் சிறிது விளக்கிக்காட்டாவிடிற் "கன்மம்" என்று நாமெடுத்துக்கொண்ட விஷயம் முற்றும் பூரணமாகாதாகையால் அவற்றை யடுத்த மாதச் சஞ்சிகையில் முடிப்போம். நமது பத்திரிகா நண்பர்களை அதுவரைச் சற்றுப் பொறுமையுடனிருக்கும்படி பிரார்த்திக்கின்றோம். ஏனெனில் இது நமது ஆரியகுலக் கற்பக தருவாதலால்.

(இன்னும் வரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

வேலூர் வாசிகளுக்கு:—

கடந்த அக்டோபர்மீ 30உ வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலூருக்கடுத்த சதுப்பேரியில் 27 ஹிந்துக்கள் கிருஸ்து மதத்தில் ...சேர்க்கப்பட்டார்கள் என்ற சங்கதியைக் கண்டோம். மேலும் நமது சந்தாநேயர்களிற் சிலரும் அதைப்பற்றி வரைந்துளார்கள்.

ஓ வேலூர் வாசிகளே! இவர்கள் ஹிந்துமதத்தில் கடவுளையடையச் சரியான மார்க்கமில்லை யென்று அறிந்தார்களா? அதினும் கிருஸ்து மார்க்கத்தில் தான் உண்மையிருக்கிறதென்று தெரிந்து கொண்டா அதிற்போய்ச் சேர்ந்தார்கள்? ஒருகாலுமில்லை யென்பது நிச்சயம். ஏனெனில் அப்படியிருக்கமுடியாது. அவ்வாறு, உண்மையாகவே சரியானசுயமத ஆராய்ச்சியில்லாததால், நமது மதத்திலுள்ள புராணவிஷயங்கள், சரியை கிரியைகள், இவற்றின் வெளி விஷயங்களில் கிருஸ்துமத போதகர்கள் குற்றங் கூறுவதைக்கேட்டு மயங்கி அம்மதத்தில் சேர்ந்த கல்வியுடைய இரண்டொருவர் மறுபடி நமதுமதத்திற்கே திரும்பி விட்டிருப்பதேயதற்குப் போதியசான்றாகும். பாமரஜனங்கள் ஆராய்ச்சியில்லாததால் சரியையாதிகளின் உண்மையையறியாது மயங்கக்கூடு மெனினும், அன்னிய மதத்தை யாராய்ந்தறியும் ஆற்றலும் அவர்களுக்கில்லை யாதலின் எவரும் மதத்திற்காகச் செல்வதில்லை. உலகபோக நாட்டமே யவர்களை மயக்கி யிழுத்துக் கொள்கிறது.

கிருஸ்துமத போதகர்கள் "எங்கள் மதத்தில்தான் மோக்ஷமுண்டு; மற்றமதத்தில் இல்லை. எங்கள் மதத்தில் சேராதவர்களுக்கு நரகமே கிடைக்கும். ஏசுகிருஸ்து நம்மனைவர் பாபத்தையும் ஏற்றுக்கொண்டார்" என்று இத்தகைய போதனைகளைக் கூறுவார்களேயன்றி வேறு அனுபவமாக அறியத்தக்க உண்மை யேதேனும் தங்கள் மதநூலி லிருக்கிற தென்று காட்ட அவர்களிடம் ஒன்றுமில்லை.

நேயர்களே ! மதத்தைப் பாதுகா...
யன்றோ. சத்தியமும் பூரணமுமான மதத்தை ...
சமயம்புகும் நம்மவரைத் தடுத்து அவ்வாறு மயங்கா...
வொருவருக்கும் கடமையன்றோ. நமது மதம் பணத்தாலு...
லும் பாதுகாக்கப்படுவதல்ல. என்று மழியாச் சத்தியமே யதற...
வன். தோப்பாசாமி, நரசிங்கசாமிமுதலிய மகான்கள் உள்ள பூமியி...
நீங்கள் மதவிஷயத்தில் இப்படி வலட்சியமாக நடந்து கொள்ளலாமோ.

இவ்வாறு வெளிமயக்கில் சிக்கிப் புறமதத்தில் இழுக்கப்பட்டவர்களை யுடனே நமது மதத்தில் சுலபமான பிராயச்சித்தம் செய்து மறுபடி நம் மதத்தில் சேர்த்துக்கொள்ள முயல்வது உங்கள் கடமையாகும். இவ்வாறு செய்வதைத் தடுப்போர் நமது மதத்திற்குத் துரோகம் செய்வோராவர். இக்காலத்தில் அவ்வாறு செய்யவேண்டியது அத்தியாவசியமாக விருக்கிறது. வேலூர்வாசிகளே எழுமின் ! இத்தகைய மானக்கேட்டிற்கு இன்னமும் இடங்கொடுப்பீர்களாயின் மிக்க அவகேடாய் முடியும். அன்னிய மத போதகராகிய ஆடவர் மாதர் இவர்களின் நயப்பான சம்பாஷணை, பசப்பு வார்த்தைகள், அபிநயங்கள், இலவசமாய் வீட்டிற்கு வந்து பெண்களுக்குக் கல்வி கற்பிக்கிறோம் என்று நடிப்பது இவைகளால் மயங்கிவிடலாகாதென்று நம்மவர்க்குப் போதியுங்கள். இன்றேல் பின்னால் உங்கள் மக்களைப் பறிகொடுத்துப் பரிதவிக்க நேரிடும். நமது ஆனந்தன் பன்முறை இவ்விஷயத்தில் நமக்கு அறிவுறுத்தியும் நாம் கவனிக்காதிருத்தல் பெருங் குற்றமன்றோ. இது விஷயமாக வேலூரில் உடனே ஒரு சங்கத்தை ஸ்தாபித்து இவ்வாறு நமது மதத்தைச் சேர்ந்தவர்களைப் பறி கொடுக்காதிருக்க வேலை செய்யுங்கள்.

அப்பர் சுவாமிகள் மடம், தோப்பா சாமி மடம் முதலியவற்றிலுள்ள பக்திமான்களே ! இது உங்கள் கடமையன்றோ? இன்றேல் மகா ஞானிகளின் திருநாமங்களால் தாபிக்கப்பட்ட மடங்களினால் என்ன பயன்? இதனினும் வேறு புண்ணியச்செயல் என்ன இருக்கிறது ? சைவசமையத்தை நிலைநிறுத்த அப்பர் சுவாமிகள் பட்டபாடு எவ்வளவு ? அதைக் கவனித்து அம்மடத்தைச் சேர்ந்த நீங்கள் அதில் இம்மியளவேனும் செய்யுங்கள். சீக்கிரம் நீங்கள் செய்யும் முயற்சியைப்பற்றி ஆனந்தன் மூலமாயறிய மிக்க ஆவலுள்ள,

உங்கள் அடிமை

சிவநேசன்.

குறிப்பு:—வேலூரில் மதப்பற்றுடைய பக்தர்கள் பலர் இருப்பதால் கட்டாயம் இதைப்பற்றித்தக்கமுயற்சி யெடுத்துக்கொண்டு ஒரு சங்கத்தைத் தாபிப்பார்க ளென்று நம்புகிறோம். வேலூரில் மடங்கள் தவிர அனேகம் பஜனைச் சங்கங்களிருக்கின்றன. இவர்களெல்லாம் இக்காலத்தில் இத்தகைய தொண்டு செய்யவேண்டியதவசியம் — அன்னிய மதத்தவர்கள் நம்மவரை பலவிதத் தந்திரங்களால் மயக்கித் தங்கள் மதத்திற்கு இழுப்பதையே பெரிய வேலையாய்ச் செய்யும்போது, நாம் அதைத் தடுத்து நம்மவர் அவர்கள் வலையில் சிக்காதிருக்கும்படி செய்யாமல் இருப்பது பெரிய துரோகமாக முடியுமன்றோ — நாம் செய்யும் மற்ற கைங்கரியங்களால் சிவனும் விஷ்ணுவும் ஒருபோதும் திருப்தி யடையார்கள். பத்திரிகாசிரியர்.

...கீத வசனம்.

(...-ம் பக்கத்தொடர்ச்சி)

(...ரிகளை ஒழித்துவிடு என்றருளிய ப வான் பின்னும் கூறுகின்றார்.)

... அர்ச்சுனா ! ஒருவன் தன் ஆசிரம தருமத்திற்குத் தகாதெனக் ...க்கப்பட்ட கருமத்தைச் செய்யலாகாது. தன் ஆசிரமத்திற் குரிய கருமத்தைச்செய்து மரணமடைவானாயினும் சிரேஷ்டமாம். உன்போன்ற அரசர் முதலியோர் விலக்கப்பட்ட கருமங்களை விசேஷமாகவும் பூரணமாகவும் செய்வதைக் காட்டிலும், விதித்த கருமங்களைக் கொஞ்சமாகவும் குறைபாடாகவும் அனுஷ்டித்தல் மேலானதாம் " என்றருளினார்.

இவ்வாறு ஸ்ரீபகவா னருளியதைக் கேட்ட விஜயன் பகவானைநோக்கி " சுவாமி ! ஒருவன் தனக்குச்செய்யப் பிரியமில்லாத காரியத்தை யன்னியர் பலவந்தத்தால் செய்வதுபோல், நிஷேதித்த பாபகருமங்களைச் செய்யப் பிரியமில்லாத புருஷன் எதனால் தூண்டப்பட்டு அக்கருமங்களைச் செய்கிறான் ? " என்று வினவினான்.

அர்ச்சுனனது இக்கேள்விக்குத் திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்யும் பகவான் பின்வருமாறு கூறியருளினார்:—

" ஏ பார்த்த ! அவ்வாறு பாபகருமங்களைச் செய்யத் தூண்டுவது இராஜோகுண சம்பந்தமான இக்காமமேயாகும். இது மகாகொடிது.

அர்ச்சுனன்:—பகவான் ! குரோதகுணமே கொடிய அனர்த்தங்களைச் செய்யும்படி புருஷனைத் தூண்டுகிறதாதலின், காமத்தால் தூண்டுதல் சம்பவியாதன்றோ?

பகவான்:—அர்ச்சுனா ! இக்காமத்தின் கோரிக்கை பூரணமடைவதை ஒருவன் தடுக்கும்போது இக்காமமே மிக்க வெறுப்பாகப் பரிணமித்துக் கொழுந்து விட்டெரியும் அக்கினிச் சுவாலைபோல் வளர்ந்து வெகுளி யென்ற பெயரடைகின்றது. ஆதலின் இக்காமமே குரோதமாக மாறுகின்றது. இது செய்யுங்கெடுதியை பின்னுங் கூறுதுங் கேட்பாயாக.

இக்காமம் எவ்வகைப்பட்ட போகங்களாலும் சாந்தி யடையாதது. அக்கினி, காஷ்டத்தையும் நெய்யையும் பெறப்பெற எவ்வாறு தணியாமல் மென்மேலும் விருத்தி யடையுமோ அவ்வாறே இக்காமமும் எவ்வகைப் போகங்களை யனுபவித்தாலும் தணிவடையாது விர்த்தியடைந்து கொண்டேயிருக்கும். இதனால், இக்காமத்தால் ஏவப்பட்டவன் பாபகருமங்களைச் செய்வதால் எவ்வளவோ துக்கருபமான ...களை யனுபவித்தும் ...ம் பின்னும் பின்னும் பாபகர்மத்தை ...ய்துகொண் டிருப்பான். ...லின் ஏ அர்ச்சுனா ! இச்சம்சாரத்தில் இக்காமமே கொடிய பகைவன் என்று நீ கருதுவாயாக.

187443.

(இன்னும் இக்காமத்தினாலுண்டாகும் பெருங் கெடுதியை யருளிச் செய்கிறார்.)

"ஏ அர்ச்சுன! அக்கினியைப் புகை மறைப்பது போலும், கண்ணாடியை மாசு மறைப்பதுபோலும், கர்ப்பத்திலுள்ள சிசுவைச் சர்மம் மறைப்பதுபோலும், இக்காமம் ஞானத்தையே மறைக்கும். இக்காமம் இந்திரியம், மனம், புத்தி இவைகளின் வழியாக உள்ளே புகுந்து ஞானத்தை மறைத்து தேகாபிமானம் முதலிய மோகங்களை யுண்டாக்கி விடுகின்றது" என்றார்.

இத்தகைய காமத்தை யெதனால் அடக்கலாம் என்ற அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் அருளிச் செய்கின்றார்:—

ஏ அர்ச்சுன! இக்காமம் இச்சித்த போகத்தை யளிப்பதால் இதை யடக்க முடியாது. ஏனெனில் இச்சித்த போகத்தைப் புசிக்கும்போது அது திருப்தியடைந்ததாகத் தோன்றினும், கட்டாயம் மீண்டும் மீண்டும் எழும். ஆதலின் இது சாமபேத தானாதிகளால் வெல்லத்தக்க சத்துருவன்றாம். ஆதலின் இந்திரியாதிகளைப்பற்றி அவற்றின் மூலமாய் மயக்கத்தை யுண்டாக்கும் இக்காமத்தை இந்திரியாதிகளின் வழியாகவே யடக்கவேண்டும். அதாவது முதலில் இந்திரியங்களை வசம் செய்துகொள்வதால் காமத்தையடக்கலாகும்.

இத்தூல தேகத்தைப் பார்க்கிலும் ஞானேந்திரியங்கள் விசேஷம்; ஞானேந்திரியங்களைப் பார்க்கிலும் மனம் மேலானதாகும்; மனதைப் பார்க்கிலும் நிச்சயரூபமான புத்தி விசேஷமாம்; இப்புத்தியைப் பார்க்கிலும் தேகம், இந்திரியம், மனம், புத்தி யாவற்றையும் சாக்ஷியாக விருந்தறியும் ஆன்மாவே முதன்மை யானதாம்.

ஆதலின் இந்திரியங்களை வசஞ்செய்தால் பின்னர் மனம் புத்தியிரண்டையும் வசம் செய்யலாகும். அதன்பின் யாவற்றிற்கும் மேலாயுள்ள ஆன்மாவை அநுபவமாயறிந்து ஜனன மரணாதி யொழியும் வண்ணம் இக்காமத்தை யழிப்பாயாக.

[பகவான் இங்கு காமம் என்றது ஆசை யென்பதே. இந்த ஆசையே மாயையென்று கூறலாகும். ஏனெனில் மனமே மாயையென்று கூறப்பட்டிருக்கிறது. மனமோ இச்சையையே சொரூபமாக வுடையது.

"மனமன மெங்குண்டு மாயையு மங்குண்டு
மனமன மெங்கில்லை மாயையு மங்கில்லை
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை
பினைமாய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனையாய்த் திருப்பது தத்துவர் தானே."

மனமடங்கினாலன்றி இச்சை யொழியாது. மனதை யடக்கவேண்டுமாயின் அதன் உற்பத்தி ஸ்தானத்தை யறிந்தாலன்றி அதை யொழிக்க முடியாது. இதனால் காமத்தை யொழிக்க வேண்டுமாயின் அதன் இருப்பிடத்தை யறிந்தாலன்றி முடியாது. இதனாலே, ஆன்மதரிசனமே காமத்தை யொழிக்க வழியென்று அர்ச்சுனன் உணரும்படி, மேற்கண்ட மனம் இந்திரியங்களின் துவாரமா வெளிச்சென்றே விஷயாதிகளைப் பற்றுகிறதாதலின், இந்திரியங்களை முதலில் அடக்கினால் மனமடங்கும் எனப்பட்டது. அப்படி மனம் உள்ளடங்கினாலும் காமம் என்ற இச்சை யொழிந்ததல்ல. மனம் உண்முகத்தி லிருந்தாலும் இச்சையென்ற காற்றால் அலைந்துகொண்டேதா னிருக்கும். அதன் மூலத்தை யறிந்தாலன்றி யது ஒழியாது.

காமம் அல்லது இச்சையென்பதை மேற்கண்ட விதமாகவன்றி வேறு வழியா யொழிக்க முடியாது. அப்படியடக்க முயன்றாலும் அடக்கும் தொழிலை நாம் மறந்ததே அது மறுபடி கிளம்பிவிடும். காமம் உலகபோகங்களாகிய நாமரூப பதார்த்தங்களிலேயே நாட்டமுடையது. நாமரூபம்யாவும் அநித்தியம் என்ற திடஞானம் வந்தாலன்றி இச்சையறாது; ஆன்மசொரூபத்தை அதாவது நம் நிஜவடிவை நாம்காணில், அப்போதுதான் நம்மாலறியப்படும் மற்ற யாவுமே அநித்தியம் என்றும் சடம் என்றும் துக்கமென்றும் பிரத்தியக்ஷமாய்த் தோன்றும். அப்போதே காமம் அல்லது இச்சையென்பது அடியோ டொழியும். "நிராசையின்றேற் றெய்வ முண்டோ" என்றும், "ஆசாபிசாசைத் துரத்தி, ஐயனடியிணைக் கீழென்னை யடக்கிக் கொண்டி...." என்றும் தாயுமானவர் கூறியருளினார். இதனால் காமம் என்பது ஞானத்தையே மறைக்கும் கொடிய விரோதியென்றும், மனதை யடக்கி ஆன்மசொரூபத்தை யறிவதனாலேயே இதை யழிக்கவேண்டுமென்றும் பகவான் அருளினார். இது ஞானயோகமாகும்]

(இந்த மூன்றாவது அத்தியாயத்தில் ஞானயோகத்திற்கு அனுகூலம் செய்வதாகிய நிஷ்காம கர்மயோகம் விவகரிக்கப்பட்டது. கடைசியில் ஞானயோகம் குறிப்பாய்க் கூறப்பட்டது.)

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

4-வது * சம்பிரதாயவத்தியாயம்.

(முன் இரண்டத்தியாயங்களில் கூறியருளிய கர்மயோக ஞானயோகங்களையும் விவரமாகக்கூறக் கருதிய பகவான் இவ்வத்தியாயத்தில் ஞானயோகத்தைப்பற்றிக் கூறியருள்கிறார்.)

சக்ராயுதபாணியாகிய ஸ்ரீபகவான் பார்த்தனை நோக்கிக்கூறுகிறார்:—

"ஏ அர்ச்சுனா! அநாதியானதும் நாசமற்றதுமாகிய இந்த ஞானயோகத்தைச் சிருஷ்டியின் ஆதிகாலத்தில் நான் சூரியனுக்கு உபதேசித்தேன். சூரியன் தன் புத்திரனாகிய மநுவுக்கு உபதேசித்தான்; மநு இக்ஷ்வாகு

* ஞானவிபாக யோகம்.

வென்னும் தன் மைந்தனுக் குபதேசித்தான். மற்றும் (நிமி, ஜனகன், அஜாதசத்துரு, கைகேயன்முதலிய தவசிரேஷ்டர்களாகிய) இராஜரிஷிகள் அதைப் பரம்பரையா யறிந்து அநுஷ்டித்து வந்தார்கள்.

இந்த ஞானயோகம், அளவுகடந்தகாலஞ் சென்றதால், ஒருவரும் அடையத்தகாத வண்ணம் மறைந்து விட்டது. இது யாவராலும் உணர்தற் கரிதாகிய இரகசியமாயும், இருவினைகளையு மழித்து அழியா மோக்ஷத்தை யளிக்கத்தக்கதாயு முள்ளது. இத்தகைய அழியாத ஞானநிஷ்டையை யுனக்கு உபதேசிக்கிறேன். ஏனெனில் நீ எனக்கு உகந்தபக்தனும் சிநேகிதனுயும் என்னையன்றி வேறு (உலகபோகம்) எதையும் அறியாத பக்தனுமிருப்பதால் உனக்கு இதை யுபதேசிக்கிறேன்" என்றார்.

இவற்றைக் கேட்ட அர்ச்சுனன்,

"பகவானே! இந்த ஞானயோகத்தைச் சிருஷ்டியின் ஆதிகாலத்திலேயே சூரியனுக்கு உபதேசித்ததா யருளினீர். இதில் அடியேனுக்குப் பெரிய சந்தேகம் உண்டாகிறது. சூரியன் ஜன்மமோ சிருஷ்டியின் ஆதிகாலத்திலே யுண்டானது. தமது இத்திருமேனி இத்துவாபரயுகத்தின் அந்தத்தில் உண்டானது. அப்போது வேறு தேகத்தோடு இருந்து உபதேசித்தீர் எனின், என்னைப் போன்ற மானிட ஜன்மமாகிய தங்களுக்கு அந்தத் தேகத்தில் நடந்த அநுபவம் இந்தத் தேகத்தி லிருக்கையில் மனதில் எவ்வாறு உதிக்கும்? என்போன்ற மற்ற மனித ஜன்மங்களுக்கு அத்தகைய அநுபோகம் இல்லையே யாதலின் இச்சந்தேகத்தைப் போக்கியருளல் வேண்டும்" என்றான்.

(பாமர ஜனங்கள் பகவானது அவதாரத்தைச் சாதாரணமான மனிதனெனக்கருதி அவர் உபதேசங்களை யலட்சியம் செய்து அழியாவண்ணம், அவரது தெய்வத்தன்மையை யாவரு மறியுமாறு நன்கு வெளிப்படுத்தவே பார்த்தன் பகவானை இக் கேள்வி கேட்டான்.)

பகவான்:—ஏ பார்த்த! சிருஷ்டியாதி காலமுதல் இதுவரையில் உனக்கும் நமக்கும் நேர்ந்த ஜன்மங்கள் பல்லாயிரமாகும். ஆயினும் நாம் எல்லா ஜன்மங்களின் அநுபவங்களையும் அறிவோம். நீயோ கடந்த ஜனனங்களின் அநுபவங்களில் சிறிதும் அறியமாட்டாய். இதுவே நம்மிருவர்க்கும் பரஸ்பரமுள்ள பேதமாகும்.

(ஈசுவரன் உலகாநுக்கிரகத்தின் பொருட்டு லீலாமாத்திரமாய் அவதரிப்பவர். மனிதன் கர்மவயப்பட்டு ஜனன மரண சக்கரத்தில் சுழன்று கொண் டிருப்பவன். ஈசுவரன் சர்வஞ்ஞத்வ முடையவர்—மனிதன் சிற்றறிவுடையவன்.)

(பகவான் தாம் பலஜன்மங்கள் எடுப்பதன் காரணத்தை விவரித்துக் கூறுகிறார்).

ஏ பார்த்த! ஜனன மரணமற்ற சர்வவியாபியான ஈசுவரனாகிய நாம் பக்தர்களின் துயரை நீக்கி, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்து, உலகில் தருமத்தை நிலைநாட்டும் பொருட்டாக யுகங்கள் தோறும் அவதரிப்போம். நாம் நமது பாரமார்த்திக நிலையில் இருந்தபடி யிருந்தே, மாயையின் வல்லமையால் தேக முடையவன்போல் ஜனிப்போம். ('நமது சரீரம் மாயாசரீரமேயன்றி மற்றையர் சரீரம்போல் கர்மத்தா லுற்பத்தியான பௌதிக சரீரமன்றாம்' என்றபடி)

அர்ச்சுனன் "ஏ பகவான்! தங்களுக்கு மாயையே தேகமாயின் பௌதிகசரீர தர்மமாகிய மனுஷ்யத்வாதி தர்மங்கள் தங்களிடம் தோன்றுவானேன்?" என்று கேட்ட சங்கைக்குப் பகவான் அருளிச்செய்கின்றார்:—

"ஏ அர்ச்சுன! எம்மிடத்தே தோற்றும் மனுஷ்யத்வம் முதலிய தருமங்கள் உண்மையில் இல்லை. ஆனால் உலகர்க் கனுக்கிரகம் செய்யும்பொருட்டு நமது மாயையாற் புலப்படும். எவ்வெக்காலத்தில் தர்மம் குன்றி அதர்மம் விர்த்தியாகுமோ அவ்வக்காலத்தில் யாம் அவதாரம் செய்வோம்.

இவ்வாறு எனது திவ்ய அவதாரத்தின் தன்மையையும், என் கருமமனைத்தும் லோகாநுக்கிரகத்தின் பொருட்டே என்பதையும் உள்ளபடி யறிந்தவன், ஞானமார்க்கத்தில் சென்று பிறப்பிறப்பாகிய சாகரத்தைக் கடந்து என்னையே யடைவான். இவ்வா றடைந்தோரை அளவிடற் கரிது. மேலும் யாரார் எந்தெந்தத் தெய்வத்தை மெய்யென நம்பி வழிபடுகின்றார்களோ, அவரவர்களுக்கு அந்தந்தத் தெய்வமாய் நின்று அவரவர் கோரியவற்றை யளிப்பவனும் யானே." என்றருளினர். (தொடரும்)

சீடன்.

கவர்ன்மெண்ட் பரீக்ஷைகள்.

1921—22-வது வருடத்தில் நமது இராஜதானியில் நடந்த கவர்ன்மெண்ட் பரீக்ஷைகளைப்பற்றிய ரிபோர்ட்டிலுள்ள முக்கியமான அம்சங்கள் யாவரும் அறியத்தக்கவை. ஒவ்வொருவகுப்பிலும் பல உட்பிரிவுகளையுடைய பனிரண்டுவகுப்புகளில் பரீக்ஷைகள் நடந்தன. மொத்தம் 506 ஸ்தலங்களில் பரீக்ஷைகள் நடந்தன. பரீக்ஷை செய்யப்பட்டவர்கள் தொகை 35,173. கவர்ன்மெண்ட் பரீட்சைகளுக்குக் கமிஷனராக விருப்பவரின் காரியதரிசியாகிய மிஸ்டர் ஹாப்டே என்பவரும் உதவி காரியதரிசியாகிய ஸ்ரீமான் இராவ்சாஹேப் கிருஷ்ணராவ் போன்ஸ்லே அவர்களுமே இப்பரீக்ஷைகளுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியவர்கள். இவர்களால சாதாரணமாய் வருடந்தோறும் நடத்தப்படும் பரீட்சைகளோடு, 1921௵ டிசம்பர்௴ இந்திய இம்பீரியல போலீஸ் பரீக்ஷைகளை நடத்தவேண்டியதைப் பற்றிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டி யிருந்தது. இப்பரீக்ஷைகள் ஒவ்வொன்றிலும் இவ்வருடம் மாணவர்கள் தொகை அதிகமாயிற்று. அவற்றை ஒழுங்காகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்றுவதற்கு மிக்க உழைப்பு எடுத்துக் கொண் டிருக்கவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் மானேஜராக விருந்த ஸ்ரீமான் இராவ்சாஹேப் கிருஷ்ணராவ் போன்ஸலே அவர்கள் மிக்க பொறுப்புடன் உழைத்துச் சிரமம்பாராது தமக்கு உதவிசெய்ததைப்பற்றி புகழ்ந்து தாம்செய்த சிபாரிஸின்பேரில் கவர்ணமெண்டார் அவரை உதவிக்காரியதரிசி பதவிக்கு உயர்த்தியதை யறிந்து தாம் சந்தோஷ மடைவதாகக் கமிஷனர் தமது ரிபோர்ட்டில் குறிப்பிட்டதைப்பற்றியும், கவர்ன்மெண்டார் தங்கள் பதிலில் இராவ்சாஹேப் அவர்கள் விஷயத்தில் தாங்கள் சந்தோஷப் படுவதாகக் கூறியிருப்பதையும் யாவர்க்கும் நாம் சந்தோஷத்தோடு அறிவிக்கிறோம். சற்றும் சுயநலங்கருதாது யார் மாட்டும் நலம்புரிவதையே விரதமாகவுடைய அப்பெருந்தகையாரை யறிந்த ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை யறிந்து மனமகிழ்வெய்துவார்க ளென்பது திண்ணம்.

ஓர் ஐய வினா.

கலைதேளிந்த ஐயன்மீர் !

(அ) எம்பெருமானாகிய சிவபிரான் எழுந்தருளி யிருக்கும் ஆலயங்களில், 'வைதிகப்பிரதிஷ்டை' என்னும் ஒரு பிரதிஷ்டை செய்வதுண்டா?

(ஆ) ஆகமப்பிரதிஷ்டை, வைதிகப்பிரதிஷ்டை, இவ்விரண்டு பிரதிஷ்டைகளுள் எது நியாயமானதும் சிரேஷ்டமானது மாகும் ?

(இ) தொன்று தொட்டு ஆகமப்பிரதிஷ்டை செய்து கிரியைகள் நடந்து வந்து, ஏதோ அசந்தர்ப்பங்களால் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம்செய்வதா யிருந்தால், வைதிகப்பிரதிஷ்டை செய்யலாமா ?

(ஈ) அப்படிச் செய்வது நியாய மன்றெனின், அதற்குப் பரிகாரம் ஏதேனுமுளதா ?

மேற்கண்ட ஐயங்களை, ஆகம வல்லுநர்களாகிய பெரியோர்கள் மேற்கோள்களோடு, நம்மானந்தன் மூலமாய் நீக்குமாறு அடிபணிந்து வேண்டுகின்றனன்.

இங்ஙனம்,
உமாபதி சாமண்ண குருக்கள்,
மோகனூர்.

எண்ணெய் ஸ்நானம்.

இதைத்தான் ஆரோக்கிய ஸ்நானம் என்று சாற்றவேண்டும். இதை நம் நாட்டார் மிகவும் அதிகமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அதினாலேற்படும் சரீராரோக்கியத்தை முற்றிலும் அனுபவித்தவர்களாகக்காணவில்லை. முறையோடு ஸ்நானம் செய்தால் முற்றிலும் சுகமடைவார்களென்றால் மிகையாகாது. சிலர், எண்ணெயை (சுவாமிகளுக்கு எண்ணெய் அபிஷேகம் பூசாரி செய்விக்கிறதுபோல்) ஐந்து நிமிடங்களில் மடமடவென்று தேய்த்து உடனே அரைப்புப்போட்டு ஸ்நானம் செய்கிறார்கள். சிலர், புஜபல பராக்கிரம சாலிகளைக் கொண்டு தலையில் தாளம்போட்டு, இவரோடு அவருக்குத்தாக்க அவரோடு இவருக்குத்தாக்க, தடபுட தடபுடவென்று தாக்கி, வறட்டும் வறட்டுமென்று உலாவிக்கொண்டிருந்து சிறிதுநேரம்

கழித்து அரைப்புப்போட்டு ஸ்நானம் பண்ணுகிறார்கள். இன்னும்சிலர், நல்ல சாதிப் பலாப்பழத்தில் தேன்வடிந்தாற்போல் சளசள வென்று வடியவடியத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்கிறார்கள். இவ்விதம் பலமாதிரியாக எண்ணெய் தேய்க்கிறதில் மட்டும் சம்பிரதாயமாகச் செய்கிறார்களேயொழிய ஸ்நானம் செய்யவேண்டிய முறைகளை அனுசரிக்கிறதில்லை.

முறை.—சாதாரண ஸ்நானத்துக்குத் தயார் செய்யும் வெந்நீரைப்பார்க்கிலும் மூன்று மடங்கு அதிகம் வெந்நீர் பொறுக்கக்கூடிய சூடுள்ளதாகத் தயார் செய்து கொள்ள வேண்டியது. ஸ்நானம் செய்யும் அறை தனிமையாக இருக்க வேண்டும். அந்த அறைக்குக் காற்றோட்டம் போதுமானபடி இருக்கவேண்டும். அவரவர்கள் வழக்கப்படி எண்ணெயோ அல்லது வைத்திய பாகப்படி சரீரரோகத்துக்குத்தக்கவாறு செய்திருக்கும் தைலமோ வேண்டுமளவு எடுத்து, எண்ணெயானால் நன்றாய்க் காய்ச்சிச் சூடுள்ளதாகவும், தைலமானால் சூடு ஏற்றிக்கொண்டும் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு பிறருடைய உதவியின்றி நமக்கு நாமே தேய்த்துக்கொள்ள வேண்டும். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை படபடப் பன்னியில் மெதுவாகச் சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களையும் நன்றாய்அழுந்தத்தேய்க்கிறதும் தவிர, எண்ணெயில் தோய்த் தெடுத்ததுபோல் வெட்டை யன்னியில் சரீர முழுவதும் தேய்க்கவேண்டும். தலையில் தேய்க்கும் போது ஒவ்வொரு உரோமக் கால்களையும் விரல்களினால் கலப்பித்துக் கொடுக்க வேண்டும். ஆனால் அவயவங்களில் கண்களைப் பற்றியும் காதுகளைப் பற்றியும் சிறிது கவனிக்கவேண்டும். "விட்டுக் கெட்டது காது, விடாமற் கெட்டது கண்" என்னும் வாக்கிற் கிணங்கக்காதுகளின் வெளிப்பக்கத்தில் தேய்க்கவேண்டுமே தவிர, உள்பக்கம் அதிகமாக எண்ணெயைப் பகவிடக் கூடாது. கண்களுக்குத் தேய்க்கிறதில் சிறிது சிரமமெடுத்துக் கொள்ள வேண்டியது. முறையே, வலது கண்ணுக்கு, வலதுகைப் பெருவிரல் முதல் மூன்றாவது பெரிய விரலாலும், இடது கண்ணுக்கு இடதுகைப் பெருவிரல் முதல்மூன்றாவது பெரியவிரலாலும் எண்ணெயை நன்றாய்த்தடவி முறையே அந்தந்த விரல்களைக் கொண்டே, கண்களில் பீழைசாடுகிற மூலையிலிருந்து ஆரம்பித்துக் கீழ் இமையையே ஒட்டியே மற்றொரு மூலைக்கு விரல்களை அழுந்த நகர்த்திக்கொண்டுவந்து மேல் இமையை ஒட்டி, முன் ஆரம்பித்த மூலைக்கு, முன்போலவே நகர்த்திக்கொண்டுவந்து, பீழையை எடுக்கிற வழக்கப்படி எடுக்க வேண்டியது. இவ்விதம் கண் கரிப்புத் தாங்கும்வரை, மறுபடியும் மறுபடியும், உருட்டி உருட்டி எடுக்கவேண்டியது. இதினால் கண்களில் நாளாரம்பமாகக் காற்றினால் படிந்திருக்கும் கல் தூசி முதலிய மாசுகள் வெளியாகும். இதற்குள் கண் கரிப்பு அதிகரிக்கும்; கண்கள் சிவந்து கலங்கும்; நாசியினால் நீர் இறைக்கும். அதினால் குற்றமில்லை; உடனே வெந்நீரை ஒரு பாத்திரத்தில் மொண்டு தலைக்கு ஒரு அடி உயரத்தி லிருந்து மடமடவென்று விடாமல் ஒரேகிதானமாகச் சிறு அருவி வீழ்ச்சிபோல் விட்டுக்கொண்டே யிருக்கவேண்டும். ஐந்து நிமிடத்துக் கெல்லாம் கண்கரிப்பு மாறிச் சில்லென்று குளிர்ந்து விடும். தண்ணீர் விட்டுக்கொண் டிருக்கும் போது தலையின் மயிர்க்கால்களை விரல்களினால் நன்றாய்க் கிளரிக்கொண்டிருக்க வேண்டியதும்தவிர, அவயவங்களின் தமர்களையும் துலக்கிக்கொண்டிருக்க வேண்டும். இவ்விதம் முக்கால்பங்கு ஜலம் விட்டு முடிந்ததும் சரீரத்தில் எண்ணெய் காண்ப தரிதாகிவிடும். பின்னால் அவரவர்கள்

கொள்கைப்படி சோப்பானாலும் சரி, அரப்பானாலும் சரி, இலேசாகப்போட்டு, சரீரத்திலுள்ள அழுக்கை மீதிக்கால்பங்கு ஜலத்தினால் நன்றாய்க் கழுவிவிடவேண்டும். ஸ்நானம் முடிந்ததும் உலர்ந்த வஸ்திரத்தினால் நன்றாய்த் தலையைத் துவட்டுகிறதும் தவிரச் சரீரத்திலும் துளித் தண்ணீர்கூடத் தங்கவொட்டாதபடி துடைக்க வேண்டும். துவட்டி முடிந்ததும் சரீரத்துக்குச் சாம்பிராணித்தூபம் காட்ட வேண்டும். உடனே வெளுப்பு வஸ்திரம் அணிய வேண்டும். பகல் நித்திரையை ஒழிக்கவேண்டும்.

தற்கால நாகரீககோலத்தை அனுசரித்துத் தலைமயிரை கிராப்செய்திருக்கும் அநேகர் தலையை வகுப்பெடுத்துச் சீவவேண்டி, மயிர்களில் ஈரமிருந்தால்தான் மயிர்பணியுமென்ற எண்ணத்தை மனதிற்கொண்டு நன்றாகத் துவட்டாமல் ஈரத்தோடு உடனே சீவுகிறார்கள். அது மிகவும் தவறு. தண்ணீர் தலையில் தங்குவதினால் அநேக வியாதிகள் உண்டாகும். மேலும் எண்ணெய் ஸ்நானம் செய்த அன்று தலை சீவுதலும் கூடாது. சாதாரண ஸ்நானம் செய்தாலும்கூடத் தலையை நன்றாய்த் துவட்டி உலர்ந்தபின்தான் தலை சீவவேண்டும். நன்றாய்க்காய்ந்தபின் வேண்டுமானால் சிறிது எண்ணெயைத் தடவிச் சீவிக்கொள்ளலாம்; சிலர் எண்ணெய், தண்ணீர் இரண்டும் கலந்து ஒன்றாய்த்தேய்த்துத் தலைசீவுகிறார்கள். அதுவும் தவறே. அது நாளடைவில் வியாதிகளுக்குக் காரணமாகும்.

குணங்கள்.—எண்ணெய் ஸ்நானம் செய்வதினால் அநேககுணங்கள் உண்டு. இது யாவருமறிந்த விஷயமே. இந்த முறைப்படி ஸ்நானம் செய்வதினாலேற்படும் குணத்தைமட்டும் இங்கு எடுத்துக் காட்டுவது அவசியம். சாதாரணமாக சனி, புதன், ஆக வாரத்துக்கு இரண்டு முறை மாசம் ஒன்றுக்கு எட்டுஸ்நானம் செய்கிறதினாலடையும் பயன், இம்முறைப்படி மாசம்ஒன்றுக்கு ஒருதடவை ஸ்நானம் செய்கிறதினாலடையும் பயனுக்குச்சமமென்றே சாற்றலாம். ஒருமாதத்துக்கு இடையில் சரீரசம்பந்தப் பட்டு ஏற்படும் எவ்விதமான உஷ்ணமும் ஒரேஸ்நானத்தில் பறந்து போய்விடும். மேகரோகங்களினால் ஏற்படும், கண்களில் நீர்வடிதல், கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்வலி, கண்மறைவு முதலிய அநேகவியாதிகள் குணமாகிறதும் தவிர மறுபடியும் வாராதென்று உறுதியாய்ச் சொல்லலாம். சரீரத்தில் ஏற்படும் உஷ்ணசம்பந்தமான வியாதிகளையும் தடுக்கும்.

தாதுவிர்த்திக்காக அநேகர் அநேகம் வைத்தியர்களிடம் சென்று அநேகம் பணத்தைச் செலவிட்டும் தங்களுடைய எண்ணம் நிறைவேறாமல் ஏமாந்துபோகிறார்கள். இந்த ஸ்நானம் அடிக்கடி செய்யும் பட்சத்தில் தாதுபலமுண்டாகும் என்பதற்குச்சிறிதும் சந்தேகமில்லை. விரிவாகச் சொல்வதில் யாதுபயன்; அவரவர்கள் அனுபோகத்தில் தெரிந்துகொள்வதே மேன்மை. எண்ணெய் ஸ்நானம்செய்த மறுநாட் காலை குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்ய வேண்டும்.

I. S. செண்பகம் பிள்ளை,
தமிழ்வைத்தியம், இலஞ்சி, தென்காசித்தாலுகா.

பிழைதிருத்தம்.

207-ம் பக்கத்தில் கடைசிவரிக்கு மேல்வரியில் உள்ள "ஞான", என்பதை "ஞால" என்று திருத்திக் கொள்ளவும்.

முக்கியமான அறிவிப்பு.

1. வெளியிடப்படாத வியாசங்கள் திருப்பியனுப்பப் படமாட்டா? சிலர் ஏன் வெளியிடவில்லையென்று காரணங்கேட்கிறார்கள். ஒரு வியாசத்தை வெளியிடாததற்குப் பலவிதக் காரணங்களுண்டாதலின் காரணங்கூற அனுகூலமில்லை என்று அறிய விரும்புகிறோம்.

2. வியாசம் அனுப்புவோர் புனைப்பெயர் வைத்துக் கொள்ளினும், தங்கள் முழுவிலாசத்தை நமக்கறிவிக்காவிடின் அது கவனிக்கப்படமாட்டாது.

பத்திரிகாசிரியர்.

பிரசங்கமும் சுரோதாக்களும்.

சமீபத்தில் நடந்த ஒரு சத்காலக்ஷேபத்தைக் கேட்டதும் யாவரும் எழுந்து வெளிவந்தபோது சிலருக்குள் நடந்த சம்பாஷணையால் நாம் இவ்விஷயத்தைப் பற்றி வரையநேர்ந்தது.

பிரசங்கங்கள், காலக்ஷேபங்கள் ஆகியவை நடைபெறுவது ஏன்? சத்விஷயங்கள், நீதிகள், ஆன்மார்த்த விஷயங்கள் இவற்றை கல்வியுணர்ச்சியில்லாதவர்களும், நூலாராய்ச்சி செய்யப் போதுமான கல்வி யில்லாதவர்களும்கூட எளிதில் உணர்ந்து ஈடேறுவதற்காகவே பிரசங்கங்கள் நடப்பது. சுரோதாக்கள் என்றால் கேட்போர் என்று பொருள்.

பிரசங்கம் கேட்கச்செல்வோர் பிரசங்கியார் கூறும் விஷயங்களைக் கேட்டு அவற்றினால் நன்மையடையக் கருதி யங்கு செல்வதேயன்றிப் பிரசங்கியாரின் நடக்கைகளைக் கவனித்து நற்சாட்சி கூறுவதற்கல்ல வென்பதையுணரவேண்டும். பிரசங்கம் கேட்கும் சுரோதாக்கள் அம்சம்போலும், சுகம்போலும் குணமுடையவர்களா யிருக்கவேண்டும். அம்சம் நீரைப்பிரித்துப் பாலைமட்டும் அருந்துவதுபோல் பிரசங்கியார்கூறும் விஷயங்களில் சத்தாக வுள்ளவற்றைக் கிரகித்துக் கொண்டு அசத்தெனத் தோன்றுமவற்றை விட்டு விடவேண்டும். சுகம் என்பது கிளி. கிளி, ஒரு விருக்ஷத்திலுள்ள கனியை அது பழுத்திருக்கு மளவு வரையில் தினம் வந்து வந்து அருந்திச்செல்லும். அதுபோல் சத்காலக்ஷேபங்கள் நடக்கும்தோறும் சென்று நல்ல விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு வரவேண்டும். இதுவே அறிவாளிகளின் செய்கை.

பிரசங்கம் கேட்கச் செல்வோரில் பலர் இதற்கு மாறாக நடந்து தாங்கள் சென்று பிரசங்கங் கேட்பதா லடையத்தக்க பயனை யடியோடிழந்து விடுவதோடு, இழிகுணத்தைக் கையாளுகிறார்கள். எவ்வாறெனின், பிரசங்கம் கேட்டு வெளியில் வந்ததே தாங்கள் கேட்ட விஷயங்களில் சத்தானவைகளைப்பற்றி ஒருவருக் கொருவர் சம்பாஷித்து அவற்றை மனனம்செய்வதைவிட்டு "......பிள்ளையவர்கள் பகலில் நித்திரைசெய்வது கெடுதி யென்று மேற்கோளோடு பிரசங்கம்செய்துவிட்டார். இவர்தான் தப்பாமல் தினம் சாப்பிட்டானதும் பகல் பனிரண்டு மணிமுதல் மாலை மூன்று மணி வரையில் தூங்குவார்" என்றும் "பிரசங்கியார் "தன்மனையாளைத் தனிமனை யிருத்திப் பிறர்மனை யேகும் பேதையும் பதரே" என்று இந்நேரம் பிரசங்கித்து விட்டார். இப்போது நேராய்த் தாசி வீட்டிற்குத்தான் செல்வார்" என்றும்—இவ்வாறு தாங்கள் கண்டதோ கேட்டதோ உத்தேசமோ—பிரசங்கம் செய்தவரைப்பற்றி இழிவாய்ப் பேசிக்கொண்டு செல்கிறார்கள்.

இத்தகையாரின் நன்றியற்ற செயலை யென்னென்று கூறுவாம். இவர்கள் இவ்வாறு மொழிவதால் இவர்கள் கேட்ட சத்விஷயங்களில் அலக்ஷியமுண்டாகி அவை இவர்கள் மனதிற்றரிக்காமல் உடனே நழுவி விடுகின்றன. இதுமட்டுமல்ல; இவர்கள் ஒருவருடைய சத்குணங்களை விட்டுவிட்டு துர்க்குணங்களை மட்டுமே சிந்திப்பதால் அற்பமாகிய பன்னாடைக்கு ஒப்பாகத் தங்களைச் செய்துகொள்கிறார்கள். இத்தகையார் பிரசங்கம் கேட்கச் செல்வதால் புண்ணிய பலனுக்குப் பதிலாகப் பாபத்தையே சம்பாதித்துக் கொள்கிறார்க ளென்பது நிச்சயம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றார் நாயனார்.

கொடிய விடம்பொருந்திய நாகத்தினிடம் கிடைக்கும் மணியும், சேற்றில் உண்டான செங்கமலமலரும், நீச்சுமணம் பொருந்திய இப்பியிலுண்டாகும் முத்தும், பசுவின் வயிற்றிலிருந் துண்டாகும் கோரோஜனமும், உயர்வான பொருள்களாகக் கொள்ளப் படுகின்றன. நல்லவிஷயங்கள் இழிந்தவர்கள் அல்லது பகைவர் வாயினின்று வரினும் அவைகளை யேற்றுக்கொண்டு அவற்றால் பயனடைவதே அறிவாளிக்கழகாம்.

சீடன்.

நம்நாட்டார் கவனிக்க வேண்டியது.

"நல்ல தேகசுகம்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகிய டாக்டர் ஜெ. யச். கெல்லாக் (Dr. J. H. Kellogg, Editor of "Good Health") என்பவர் பின்வருமாறு கூறுகிறார்; "எஸ்கிமோ ஜாதியாரை (வடதுருவத்திற்கருகில் வசிப்போர்) தேயிலை, காபி, புகையிலை மூன்றும் கபடமாய் பலஹீனர்களாக்கி விட்டன. அன்னிய நாட்டாரது கூட்டுறவால் அவர்கள் தம் சுதேச நாணயத்தையும், சுதந்தர உணர்ச்சியையும், உயர்வான நடக்கையையும் இழந்துகொண் டிருக்கிறார்கள். * * * *"

மேல் நாட்டு ஆசாரங்களை யெல்லாம் கண்மூடித் தனமாகப் பின்பற்றும் நம் நாட்டார் இந்த டாக்டர் மொழிகளை நன்றாகச் சிந்தித்து நடப்பார்களோ !

திரும்பவும் ஹிந்துவானார்.

திரிச்சிப் பிரமுகரும், திரிச்சி நகரபரிபாலன சபையின் தலைவருமான ஸ்ரீமான் F. G. நடேசய்யர் பிராயச்சித்தம் செய்து கொண்டு, திரும்பவும் ஹிந்துவாய் விட்டார். தங்கள் சொந்தமதத்தின் பெருமை தெரியாமல் கிறிஸ்தவரான இந்துக்கள் எத்தனையோபேர் இந்த நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஸ்ரீமான் நடேசய்யர் வழிகாட்டி யிருக்கிறார்.

(லோகோபகாரி)

குறிப்பு:—கல்வியறிவும் மதஆராய்ச்சிச் செய்யச் சக்தியும் வாய்ந்தோர் மட்டும் ஆரம்பத்தில் ஆராய்ச்சிசெய்யாது நம் மதத்தை விட்டுச் சென்றால் பிறகு உண்மையறிந்து திரும்பி வந்துவிடுகிறார்கள் என்று 223-ம் பக்கத்தில் நாம் வேலூர் வாசிகளுக் கெழுதிய விஷயத்தில் கூறியுள்ளதற்கு மேற்கண்ட விஷயம் ஓர் திருட்டாந்தமாகும்.

இவ்வாறு நம்மவரை மறுபடி நம்மதத்தில் சேர்த்துக்கொள்ள அதிக பணச்செலவில்லாத சுலபமான பிராயச்சித்தவழியை யேற்பாடுசெய்ய நம்மவர்கள் முயலவேண்டியது இக்காலத்தில் ஓர் முக்கியமான கடமையாயிருக்கிறது. ஸ்ரீமான் ஐயரவர்கள் இது விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்டால் பெரும் புண்ணியமாகும்.

பத்திராசிரியர்.

தபால் கொள்ளைக்காரர்கள்

(198-ம் பக்கத் தொடர்ச்சி)

கன்னிகை நகைத்துக்கொண்டு "வீடா ! எனக்கு வீடேது தாய்தந்தையரேது ஒன்றுமேயில்லை, இந்த வீடுதான் என்வீடு. இவர்களே என் தாய் தந்தையர்" என்றாள்.

இரங்:—நீ மிக்க அதிகப் பிரசங்கியாய் விட்டாய். உடனே சீக்கிரம் என் கூடப் புறப்படு.

கன்னி:—"நான் உன்கூட ஒருபோதும் வரவேமாட்டேன்" என்றாள்.

இரங்கநாதன் மிக்க கோபமடைந்து வரமாட்டாயா வென்று ஆங்காரத்தோ டெழுந்து போய் அவளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிழு

த்தான். அவள் அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளத் தன்னாலான மட்டும் முயற்சிசெய்தாள். முடியவில்லை. அவன் கொடுக்கும் தொந்திரவால் இரங்கநாதன் கோபத்தோடு சாமிநாதனை நோக்கி “ சாமிநாதம்! சீக்கிரம் இங்கேவா ” வென்றான்.

சாமிநாதன் எழுந்து வருவதற்குள் குருநாதன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து இரங்கநாதன் கன்னத்தில் கொடுத்த ஒரேகுத்தால் அவன் சுழன்று கீழே விழுந்துவிட்டான். இதைக்கண்ட சாமிநாதன் பிரமித்து உட்கார்ந்து விட்டான்.

இரங்கநாதன் ஸ்மரணை வந்து எழுந்து பார்த்தான். தன்ஜபம் குடியானவனிடம் ஒங்காதென்று தெரிந்துகொண்டான். சுலபமாய்க் குடியானவர்களை யேமாற்றிவிடலாமென்று நினைத்துப் பிறகு குருநாதனை நோக்கி “ அய்யா! நீசெய்வது உனக்குக் குற்றமென்று தெரியவில்லை. தந்தைக்கும் தாய்க்கும் குறுக்கே விகல்பம்செய்வது தண்டிக்கப்படத் தக்க குற்றம்” என்றான்.

குருநாதன்:—“ அப்படியா? எனக்குத் தெரியாது. ஆயினும் உன்கைகள் பலமற்றிருக்கின்றன. மறுபடி யென்முன் வரும்போது உன்கைக்குப் பல மேற்றிக்கொண்டு வாங்கள். இனி நீங்கள் துரிதமாய் இதை விட்டுப் போய்விடுவது நலம் ” என்றான்.

இரங்:—“ அப்பெண்ணை யனுப்பமாட்டாயோ? ” என்றான்.

குரு:—“ ஒருகாலு மில்லை ” என்றான்.

இரங்கநாதன் தன் நண்பனை யழைத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியில் வந்து “ என் பெண்ணுக்கு இன்னும் வயது வரவில்லை. அதை யென்னிஷ்டப்படி நடத்த எனக்குச் சர்வசுதந்தர முண்டு. என்சங்கதியுனக்குத் தெரியாது. இன்று எனக்கு விரோதமாய் நடந்ததற்காக நீ பிறகு சரியாய் அனுபவிப்பாய்” என்று கூறிவிட்டு வண்டியிலேறிப் புறப்பட்டான்.

குருநாதன்:—“ நீங்களிருவரும் முதல் தரமான முரட்டுக் கள்ளப்பயல்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரிகிறது. அதோடு கூடிய சீக்கிரத்தில் சிக்கிக் கொள்வீர்க ளென்றும் நான் அறிவேன். எட்டப்போய் உருமுவது நாய்களின் குணம் என்று எனக்குத் தெரியும்” என்றான்.

அன்று அவ்வளவோடு இரண்டு துஷ்டர்களும் தலைகுனிந்து சென்றார்கள். ஆனால் தங்கள் துஷ்ட எண்ணத்தை மட்டும் விட்டவர்களல்ல.

மறுநாள் பிற்பகல் அவ்வீட்டருகிற் சென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மாலைப்போது குருநாதன் சுமார் அரைமைல் தூரத்திலுள்ள தன் புலத்திற்குச் சென்றிருக்கிறான். அவன் மனைவி வீட்டில் வேலைசெய்துகொண்டிருக்கிறாள். கோமளவல்லி அச்சமயம் தோட்டத்தின் கோடியில் பசுக்களைப் பால்கறந்துகொண்டிருக்கிறாள். திடீலென்று யாரோ பின்பக்கம் வந்து தன்னைப் பிடித்ததைக் கண்டு அலறித் திரும்பினாள். இரண்டு துஷ்டர்களின் முகங்களையும் கண்டதே வீறிட்டலறி யுடனே மூர்ச்சையடைந்து விட்டாள்.

அத்துஷ்டர்கள் இதுவே நல்ல சமயமென்று அவளைத் தூக்கிக்கொண்டுபோய்த் தங்கள் வண்டியிலேற்றிக்கொண்டு சென்றார்கள். அவள்

